Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 15

சனிக்கிழமை
11 டிசெம்பர் 2021

கார்த்திகை 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 754
மொத்தம் 571,426

**உயிரிழப்பு**
நேற்று 18
மொத்தம் 14,573


**குணமடைவு**
544,200

## 2/3 பெரும்பான்மையுடன்
# 'பட்ஜெட்' நிறைவேறியது!

- முஸ்லிம் எம்.பிக்கள் நேசக்கரம்
- தமிழ்க் கட்சிகள் எதிர்ப்பு

கொழும்பு, டிசெம்பர் 11
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான கூட்டணி அரசின் 2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நேற்று நிறைவேற்றப்பட்டது. 15

## நல்லூரில் காஸ் அடுப்பு வெடிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 11
யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் நேற்று அதிகாலை 15

## ரயிலில் பாய்ந்து சாவு

வவுனியா, டிசெ. 11
வவுனியாவில், ரயில் பாதையில் வீழ்ந்து ஒருவர் உயிர்மாய்த்துள்ளார் என்று 15

*கள நிலைமைகளை நேரில் ஆராய*
## இலங்கை வருகின்றார் ஐ.நா. உதவிச் செயலாளர்



கொழும்பு, டிசெ. 11
ஐக்கிய நாடுகள் சபைக்கான உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா ஐந்து நாள்கள் உத்தியோக 15

## சாட்சியங்களை அழிக்காமல் நீதி கிடைக்க வழிசெய்யுங்கள்
**முன்னாள் எம்.பி. வினோ வலியுறுத்து**

வவுனியா, டிசெ. 11
அரசாங்கம், காலம்கடத்தி சாட்சியங்களை அழிக்காமல் மக்களுக்கு நீதிகிடைக்க வழிவகைகளை மேற்கொள்ளவேண்டும் என்று 15

## பூஸ்டர் தடுப்பூசி ஏற்றுவதை 2 வாரங்களில் முழுமைப்படுத்தவும்
**ஜனாதிபதி பணிப்புரை; பொது இடங்களில் தடுப்பூசி அட்டை கட்டாயம்**

கொழும்பு, டிசெ. 11
எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றலை முழுமைப்படுத்து 15

**முச்சந்தி முரளி**




வடக்கு மாகாணத்தில்
## 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு திங்களிலிருந்து 3ஆவது டோஸ்
**சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், டிசெ. 11
30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்குவகிக்கும் தொழிலாளர்கள் மற்றும் நோய்பரவும் ஆபத்துள்ள மக்கள் தொகுதியின 15

அதிரடிப்படையைக் கண்டு ஓட்டம்
## மணல் கடத்திய ஹன்ரர் புரண்டது கம்பத்தில் மோதி!



யாழ்ப்பாணம், டிசெ. 11
வடமராட்சி வல்லிபுரக்குறிச்சிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்ததாகக் கூறப்படும் ஹன்ரர் ரக 15

## விபத்தில் காயமடைந்த குருக்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 11
மோட்டார் சைக்கிள்கள் மோதுண்டதில் படுகாயமடைந்த குருக்கள் ஒருவர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று 15

யாழ். - கொழும்பு சொகுசு பஸ்
## அதிகாலையில் விபத்து பெண் ஒருவர் உயிரிழப்பு!

- 10க்கும் மேற்பட்டோர் படுகாயம்
- மதவாச்சி அருகே சம்பவம்



கொழும்பு, டிசெ. 11
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து 15

## வெடிக்கத் தொடங்கின புதிய லேபிள் சிலிண்டர்கள்!
மக்கள் மத்தியில் தொடர்கிறது அச்சம்

கொழும்பு, டிசெ. 11
சரிசெய்யப்பட்டதாகக் கூறப்படும் எரிவாயு சிலிண்டர்கள், புதிய லேபிளுடன் விநியோகிக்கப்பட்டு வரும்நிலையில், அத்தகைய புதிய லேபிளுடனான சிலிண்டர்களிலும் வெடிப்பு சம்பவங்கள் பதி 15

## சர்வதேசமே நீதியைத்தா! உறவுகள் ஆர்ப்பாட்டம்
(விரிவு மறுபக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசமே நீதியைத் தா! உறவுகள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.11

**சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கங்களின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**









**யாழ்ப்பாணம்,**

யாழ். நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. "வலிந்து காணாமல்போனோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா" போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன. போராட்ட நிறைவில் ஐக்கிய நாடுகளின் தூதுவர் அலுவலகத்திடம் மனு கையளிக்கப்பட்டது.

**கிளிநொச்சி**




கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக ஆரம்பித்த போராட்டம் டிப்போச் சந்தி வரை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது சர்வதேச மனித உரிமை ஆணையாளருக்கு மின்னஞ்சல் ஊடக அனுப்பவுள்ள மனுவின் பிரதிகளும் ஊட கங்களிடம் கையளிக்கப்பட்டன.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு -மாங்குளம் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. முல்லைத்தீவு நகரப்பகுதி வரை சென்று போராட்டத்தில் உறவுகள் ஈடுபட்டனர்.

"உள்நாட்டில் எமக்கு எந்தத் தீர்வும் கிட்டாது. சர்வதேசமே தீர்வைத் தரவேண்டும். உறவுகளின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும்" என்று அவர்கள் வலியுறுத்தினர். எங்கே எங்கே உறவுகள் எங்கே , வேண்டும் வேண்டும் நீதி வேண்டும் சர்வதேசமே பதில் சொல் உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



**மன்னார்**

மன்னார் பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே? மனிதம் பாதுகாக்கப்படுகிறதா?, அரசேகாணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே?, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நிரந்தரத்தீர்வைப் பெற்று தருவீர்களா? உள்ளடங்கலாக பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

**வவுனியா**

வவுனியாவில் தீப்பந்தம் ஏந்திப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பேரணியில் கலந்து கொண்டிருந்தவர்கள் கறுப்பு நிற ஆடைகளையும் அணிந்து ஒரு கையில் தீப்பந்தம் ஏந்தியதுடன் மறு கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒளிப்படங்களையும் ஏந்தியிருந்தனர். வவுனியா கந்தசாமி ஆலயத்தில் ஆரம்பமான பேரணி மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியை அடைந்து, அங்கிருந்து கண்டி வீதி வழியாக பழைய பேருந்து நிலையப் பகுதியை அடைந்து நிறைவுற்றது.

ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், நீதி கிடைக்கும் வரை போராடுவோம், நீதியில்லாத நாட்டில் நீதிமன்றம் எதற்கு" போன்ற கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

**திருகோணமலை**

திருகோணமலையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயம் முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. "நீதி கோரி நாங்கள் பல கடிதங்கள் எழுதியிருப்போம். ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு என எதிலும் நம்பிக்கை இல்லை. இன்று பொருளாதாரத்துன்பங்களை அனுபவிக்கிறோம்." என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ஒ-456,60,213, 110,6,18,214,125,26,113,20)

## வாழும் உரிமையும் இலங்கையில் இல்லை

### உறவுகள் ஆதங்கம்

வவுனியா,டிசெ.11

சுய கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமையும் இந்த நாட்டில் இல்லையா என்ற கேள்வியுடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம், ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு மனு அனுப்பியுள்ளது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் எமக்கான உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டு, பேசுவதே குற்றம் என்ற நிலையிலும், எமது போராட்டத்தைத் தொடர வேண்டியுள்ளது. அரச புலனாய்வாளர்களதும், படையினரதும் அச்சுறுத்தல், அரச அடிவருடிகள் எம்மை திசை திருப்பும், பீதியடையச் செய்யும், குழப்பும் செயற்பாடுகள் என்று பல எதிர்ப்பு சக்திகளுக்கு எதிராகவும் போராட வேண்டியுள்ளது.

புலிகள் மீளுருவாக்கம், நாட்டில் அமைதியின்மை ஏற்படுத்தல், சுகாதாரக் கட்டுப்பாடுகள் என்று நாளுக்கொரு காரணம் கூறி அப்பாவிகளான எங்களுக்கு நீதிமன்றத் தடையுத்தரவுகளை வழங்கி எம்மை முடக்கப்பார்க்கின்றது. இலங்கையில் தமிழருக்கு ஒரு தண்டனை. சிங்களவருக்கு ஒரு தண்டனை- என்றுள்ளது. (ஒ-4110)

## தானமாக வழங்கப்பட்ட கண்கள் யாருடையவை?

### உறவுகள் கேள்வி

மன்னார்,டிசெ.11

பாகிஸ்தானுக்குத் தானமாக வழங்கப்பட்ட கண்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடையதா என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேள்வி எழுப்பினர்.

மன்னாரில் இடம்பெற்ற போராட்டத்தில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் துண்டு துண்டாக வெட்டப்பட்டு முதலைகளுக்கு போடப்பட்டனர் என்று கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் ஒரு கதை வெளியாகியது.

தற்போது பாகிஸ்தானுக்கு 35 ஆயிரம் கண்கள் தானம் கொடுக்கப்பட்டுள்ளன என்ற தகவல் வெளியாகியுள்ளது. இவற்றின் மர்மம் என்னவென்று புரியவில்லை- என்றனர்.(ஒ-4 ,213)

# எங்கள் சாட்சிகளை மறைக்கவே முயற்சி

## உறவுகள் சுட்டிக்காட்டு

மன்னார்,டிசெ.11

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர் சுமார் 110 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். எனினும் எங்களின் சாட்சிகளை மறைப்பதற்காக, தீர்வு வழங்கப் பின்னடிக்கின்றனர் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவிக்கையில்,

நாங்கள் கடந்த 13 வருடங்களாகப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

சிறுபான்மை மக்கள் என்பதால் எமக்கு எவ்வித பதிலும் கிடைப்பதில்லை. அரசு கண்ணை மூடிக் கொண்டு இருக்கின்றது. இறந்தவர்களுக்காக நாங்கள் போராடவில்லை. உயிருடன் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்காகவே நாங்கள் போராடி வருகின்றோம் -என்றார். (ஒ-4,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை நிலைப்பாட்டில் இயங்குகிறது நீதித்துறை

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.11**

**திருகோணமலையில் சிங்களவர்களுக்கு தனிச் சிங்களத்தில் வழக்கு நடத்துவதற்காகத் தனியான நீதிவான் நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் மக்கள் வாழும் கந்தளாய் நீதிமன்றில் நீதிமன்றப் பதிவுகள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.**

கொழும்பில் 50 வீதமான வழக்குகள் தமிழர் தொடர்பு பட்டவையாக இருந்தபோதும். சிங்களத்திலேயே அனைத்து ஆவணங்களும் பேணப்படுகின்றன. திட்டமிட்ட இனவாதமே இதற்குக் காரணமாகும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஒருவரை. ஜனாதிபதி தலையிட்டு பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்து அனுப்பும் வகையிலேயே இந்த நாட்டின் நீதித்துறையின் மதிப்பு இருக்கிறது. சிறைச்சாலை மறுசீரமைப்புக்கென ஒரு இராஜாங்க அமைச்சரை வைத்திருக்கிறீர்கள். சிறைச்சாலை மறுசீரமைப்பு சிறைக் கைதிகள் நல்வாழ்வு அமைச்சர் சிறைச்சாலைகளுக்குள் தன்னிச்சையாக நுழைந்து சிறைக் கைதிகளை அச்சுறுத்தி இருந்தார். இந்தச் சமயத்திலே குற்றம் இழைத்த குறித்த இராஜாங்க அமைச்சர் திமிருடன் இந்த சபைக்கு வந்ததோடல்லாது நீதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அருகிலேயே உட்கார்ந்துமிருந்தார். நீதித் துறையானது வெளிப்படையாகவே இரட்டை நிலைப் பாட்டில் செயற்படுகின்றமை மிகத்தெளிவானது- என்றார். (எ-இ)



## ஒளிப்படமாக மகன் கதறி அழுத தாய்

யாழ்ப்பாணம்,டிசெ.11

ஒளிப்படத்தில் மகனைக் கண்ட தாய் கதறியழுத சோகச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி உறவினர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். போராட்டத்தில் போரில் சரண் அடைந்தவர்களின் ஒளிப்படங்களை தாங்கிய பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அதனைக் கண்ட தாய் ஒருவர் குழறியழுதார். குறித்த ஒளிப்படம் 2013 ஆம் ஆண்டு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தது. (ஓ-4-125)

## விழிப்புணர்வுப் பேரணி

கிளிநொச்சி,டிசெ.11

சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு, பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தினர் கிளிநொச்சியில் விழிப்புணர்வு ஊர்வலத்தில் ஈடுபட்டனர். கிளிநொச்சி ஏ9 வீதியில் ஆரம்பித்த ஊர்வலம், பெண்கள் வாழ்வுரிமைச் சங்கக் கட்டடத்தில் முடிவடைந்தது.

போராட்டத்தில் பங்குபற்றியோர் "பெண் குலத்தை மதித்து பெண்ணியம் காத்திடு.

வேண்டாம் வேண்டாம் பாலியல் துஷ்பிரயோகம் வேண்டாம், பெண்கள் மீதான வன்முறைகளுக்கு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும், ஆண் பெண் ஊதிய பாகுபாடு வேண்டாம்" போன்ற பதாகைகளை ஏந்தியிருந்தனர். (ஒ-4,113,214)



## பிபின் ராவத் மறைவுக்கு பிரதமர் மஹிந்த இரங்கல்

கொழும்பு, டிசெ.11

இந்திய முப்படைகளின் தளபதி ஜெனரல் பிபின் ராவத் அவர்களின் மறைவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

இந்திய முப்படைகளின் தளபதி ஜெனரல் பிபின் ராவத், அவரது பாரியார் மதுலிகா ராவத் மற்றும் 11 பேர் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தமை தொடர்பில் இந்திய அரசுக்கும், மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (எ-இ)

## கல்வி முறையில் சீரமைப்பு மேற்கொள்வது அவசியம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.11

எமது நாட்டின் கல்வி முறைமை, தற்போதைய உலக நடைமுறைக்கு ஏற்ற வகையில் காணப்படவில்லை மூன்றாம் நிலைக் கல்வி முறைமையில் பல்வேறு மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் பல்கலைக்கழக மாணவர்கள் எந்தப் பட்டப்படிப்பைத் தொடர்ந்தாலும், அவர்கள் அனைவரும் குறைந்தது தகவல் தொழில்நுட்பத்திலேனும் ஓரளவு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு எமது இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (எ-இ)




மரம் சும்மா இருக்க நினைச்சாலும் காத்து வந்து அதை அசைச்சுக் கொண்டே இருக்குமாம். அதை மாதிரி சிலரைப் பற்றி கனக்க கதையள் தெரிஞ்சாலும், எதுக்கு திரும்பத் திரும்ப ஒராளைப் பற்றியே சொல்லிக் கொண்டிருக்க வேனும் எண்டு பட்சி ஒதுங்கிப் போனாலும், அவையள் விடுறமாதிரி இல்லையே. பட்சிக்கு வழக்குப் போடுவன் எண்டு ஒருத்தர் அடிக்கடி சொல்லிக் கொண்டு இருக்கிறாராம். அப்பிடிப் போடுறன் எண்டு சொல்லலாமே தவிர உண்மையாவே அதைச் செய்தால், அவரின்ர குட்டுகள் தான் வெளியில வரக்கூடும். அவர் வேற ஆருமில்லை, கிட்டடியில் ஒரு பிரதேச சபையில மெம்பர் ஒருத்தருக்கு கையோங்கினதால, இப்ப இன்னொரு பிரதேச சபைக்கு அனுப்பப்பட்ட ஆள் தான்.

ஆள் ஒரு சபையின்ர செயலாளரா இருந்தாலும், அதுக்குண்டான வேலையளை ஒழுங்காச் செய்யேலையாம். ஒரு செயலாளராக இருக்கிறவருக்கு அந்த வேலை பற்றியும், அரசாங்கத்தின்ர சட்ட திட்டங்கள் பற்றியும் குறைஞ்சளவு அறிவாவது தேவை. அப்பிடி இல்லாட்டி ஆரும் அறிஞ்சவை தெரிஞ்சவையிட்ட கேட்டாவது செய்யலாம். ஆனால் இவருக்கு அந்த ரண்டும் இல்லையோ எண்டு சபையில மெம்பர்மார் கேள்வி எழுப்புகினம். ஒரு விசயம் சொன்னால், உங்களுக்கு அவரின்ர நிர்வாகத் திறமை பற்றி விளங்கும்.

அந்தச் செயலாளர் முதல் வேலை செய்த பிரதேச சபையில 'சந்தை மேற்பார்வையாளர்' பதவிக்கு ஒரு வெற்றிடம் இருந்திருக்கு. அந்தப் பதவிக்கு உள்ளக ரீதியாக அறிவிப்புச் செய்து, ஆரும் பொருத்தமான ஆக்கள் விண்ணப்பிச்சால் அவைக்கு நியமனம் வழங்கலாம். உள்ளக ரீதியா எண்டால் , அந்தப் பிரதேச சபையில இல்லாட்டி அந்தச் சபையின்ர உப அலுவலகங்களில வேலை செய்யிற ஆக்களுக்கு இதைப் பற்றித் தெரியப்படுத்தி , சரியான ஆளை வேலைக்கு எடுக்கிறதைத் தான் அப்பிடிச் சொல்லுறது. இந்தச் சந்தை மேற்பார்வை யாளர் எண்ட பதவிக்கும் அப்பிடி உள்ளகரீதியாக விண் ணப்பம் போடச் சொல்லி அறிவிக்கிறது செயலாளரின்ர பொறுப்பு.

பணி வெற்றிடம் தொடர்பான அறிவித்தலை செய்து அதை சபையின்ர தலைமை அலுவலகம், உப அலுவலங்களில் ஒட்டுறது. அந்த அறிவித்தல் கடிதம் அனுப்பி எல்லாப் பணியாளரும் அதைப் பார்த்தவை எண்டு உறுதிப்படுத்தி கையெழுத்து வாங்கிறது எண்டதுதான் அந்த உள்ளக அறிவிப்பு. சபையில வேலை செய்யாத புது ஆக்களை வெளியால இருந்து எடுக்க வேனும் எண்டால் தான், அதுக்கு பேப்பர்களில விளம்பரம் செய்ய வேனும். ஆனால் இந்தச் சபைச் செயலாளர் என்னடாவெண்டால், உள்ளகரீதியாக வெறும் கடிதச் செலவோட அறிவிக்க வேண்டிய இந்த விசயத்தை, காசு கட்டி விளம்பரமா ஊடகங்களில போட்டிருக்கிறார். சனத்தின்ரயும், அரசாங்கத்தின்ரை யும் காசு தானே எண்டு இப்பிடி விளையாட்டுக் காட்டி யிருக்கிறார் போல. அரசாங்க நடைமுறைக்கு எதி ரான விசயம் இது.

இன்னொரு வகையில சொல்லப் போனால், அரசாங்கக் காசை சட்டத்துக்கு முரணாகப் பாவிச்சு, துஷ்பிரயோகம் செய்திருக்கிறார். அதைவிட பேப்பர்களில கட்டாயம் போட வேண்டிய கேள்விப் பத்திரங்களை அப்பிடி போடாமல் உள்ளுக்கால அலுவலை முடிச்சதாகவும் கதையிருக்கு. எதைச் செய்ய வேனுமோ அதைச் செய்யாமல், எதைச் செய்யக்கூடாதோ அதைச் செய்திட்டு போனவரை இப்ப சபைக் கூட்டத்தில வைச்சு கிழிக்கினமாம். முதல்ல தன்ர வேலையை அவையவை ஒழுங்காச் செய்தால் எதுக்கு பட்சி இப்பிடி எழுதிக் கொண்டிருக்கப் போகுது? - பட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டியைப் பறிகொடுத்து தவித்துத் திரியும் யானை

*கல்லோயாவில் சோகம்*

கொழும்பு, டிசெ.11

ரயிலில் மோதி இறந்த தனது குட்டியைப் புதைத்த இடத்தில் தினமும் தாய் யானை வந்து குரல் எழுப்புகின்றது என்றும், பின்னர் அங்குள்ள பொலிஸ் நிலையம் முன்பாக வெறித்துப் பார்த்தபடி அமைதியாக நின்று விட்டுச் செல்கின்றது என்றும் கல்லோயா மக்கள் கூறுகின்றனர்.

கடந்த 22ஆம் திகதி இரவு மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதி 2 வயது யானைக் குட்டி ஒன்று உயிரிழந்தது. கல்லோயா, ஹதரஸ்கொடுவ மருத்துவமனைக்கு முன்பாக உள்ள காணியில் அதிகாரிகள் அந்த யானைக் குட்டியின் உடலைப் புதைத்தனர்.

அன்று முதல் தினமும் இரவு தாய் யானை அந்த இடத்துக்கு வந்து துன்பக் குரல் எழுப்புகின்றது என்று பிரதேசவாசிகள் கூறுகின்றனர். நள்ளிரவின் பின்னர் கல்லோயா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அமைதியாக நின்று பொலிஸ் நிலையத்தை அந்தத் தாய் யானை வெறித்துப் பார்த்தபடி நிற்கின்றது என்று கல்லோயா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறுகின்றார்.

அந்தத் தாய் யானை பகல் வேளைகளில் ஹதரஸ்கொடுவ கல்லூரியின் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் நின்று பாடசாலை மைதானத்தில் சிறுவர்கள் விளையாடுவதை அவதானித்த வண்ணம் இருப்பதையும் காணமுடிகின்றது என்றும் பிரதேச மக்கள் கூறுகின்றனர். குட்டியை இழந்து தவிக்கும் அந்த யானையின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இது தொடர்பாக கௌடுல்ல தேசிய பூங்கா அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

குட்டி இறந்தது முதல் தினமும் வந்து சென்று கொண்டிருந்த தாய் யானை இரு தினங்களாக வரவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

ஹபரணை - திருகோணமலை புகையிரதப் பாதையில் தலபத்கந்த பகுதியில் சரக்கு ரயிலில் அடிபட்டு யானையொன்று உயிரிழந்துள்ளது. அது இந்தத் தாய் யானையாக இருக்குமோ என்று மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (எ-இ)



இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் டொமினிக் வர்கலர் மற்றும் அரசியல்துறை செயலாளர் சிடோனியா கரியல் ஆகியோருடன் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கோ.கருணாகரம், வினோநோகராதலிங்கம் மற்றும் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் கு.சுரேன் ஆகியோர் கலந்து கொண்டனர். தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-110)

# இனப்பிரச்சினைத் தீர்வே பொருளாதாரத்தை மீட்கும்

*சபையில் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு*

**கொழும்பு, டிசெ.11**

**தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமானதொரு அரசியல் தீர்வைக் காணும் பட்சத்திலேயே இலங்கையின் பொருளாதாரம் மேம்படும். அரசியல் தீர்வு விடயத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய வல்லமை தற்போதைய நிதி அமைச்சருக்கு இருக்கின்றது. எனவே, இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும்.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வடக்கு, கிழக்கு என்பது 30,40 வருடங்கள் போரைக் கண்ட பகுதிகளாகும். போர் உட்பட இதர காரணங்களால் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கு நிலையான வருமானம் இல்லை. கொரோனா நெருக்கடியால் நாளாந்தம் வருமானம் பெறுபவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில் உதவ வேண்டும் என்ற கோரிக்கையை நிதி அமைச்சரிடம் முன்வைக்கின்றேன்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி, பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு நிதி அமைச்சர் அல்லற்பட்டுத் திரிகின்றார். பட்ஜெட் விவாதத்துக்கு மத்தியில் கூட அவர் இந்தியா சென்றுவந்துள்ளார்.

இந்த நெருக்கடியான நிலைமையின் தாக்கம் எமக்கும் புரிகின்றது. இந்த நிலைமைக்கு இந்த அரசு மட்டும் காரணம் அல்ல. சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த தரப்புகளும் காரணம். . தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தொரு தீர்வு காணப்பட வேண்டும்.

அது பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கும். நாம் இலங்கையர் என்ற உணர்வு வரவேண்டும். தீர்வு விடயத்தில் நிதி அமைச்சரும் செல்வாக்குச் செலுத்தும் நபராக நிச்சயம் இருப்பார். அப்போது வெளிநாடுகளில் உள்ளவர்களும் முதலிட வருவார்கள். -என்றார். (எ-இ)



# கனரக வாகனம் மோதி உடைந்தது மின்கம்பம்

முல்லைத்தீவு, டிசெ.11

முல்லைத்தீவு கொக்கிளாய் சிலாவத்தை வீதியில் மின்கம்பம் ஒன்றின் மீது கனரக வாகனம் மோதியதில் மின்கம்பம் முற்றாக சேதமடைந்துள்ளது. இதனால் சிலாவத்தை கிராமத்துக்கான மின்சாரம் நேற்று முன்தினம் அதிகாலை தொடக்கம் மாலை 5மணி வரை துண்டிக்கப்பட்டது. (ஒ-ரி1-19)

# பீல்ட் மார்ஷல் பதவி தொடர்பில் பொன்சேகா படிப்பது அவசியம்

*சரத் வீரசேகர தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.11

ஏனைய நாடுகளில் உள்ள பீல்ட் மார்ஷல்கள் தொடர்பாகப் படித்தறிந்து அவர்களைப் போன்று நடந்து கொள்ளுங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுக்கிறேன் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது பாதாள உலகக் குழுவினருடன் எனக்குத் தொடர்புள்ளது என்று சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார். உடற்பயிற்சிக் கூட ஆரம்ப அழைப்பொன்று எனக்கு வந்தது. அதில் கலந்து கொண்ட ஒளிப்படத்தைத்தான் சரத் பொன்சேகா காட்டினார். பீல்ட் மார்ஷல் என்பது உயரியது. அந்தப் பதவியுடன் நாடாளுமன்றம் வருவோர், அதற்குத் தகுதியாக மக்கள் சேவை செய்ய வேண்டும். -என்றார். (எ-இ)

# 30-60 வயதுக்குட்பட்டோருக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றல்

சாவகச்சேரி, டிசெ.11

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குட்பட்ட 30-60 வயதுக்குட்பட்டோருக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்திலும், 14, 15 ஆம் திகதி கொடிகாமம் மருத்துவமனையிலும், 16 ஆம் திகதி, வரணி மருத்துவமனையிலும் , 17 ஆம் திகதி கைதடி மருத்துவமனை மற்றும் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும். (ஒ-ரி1-9)

# ■ விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, டிசெ.11

இந்த ஆண்டுக்கான கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை, சாவகச்சேரி பிரதேச செயலக கலாசார அலுவல்கள் பிரிவில் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினர் கோரியுள்ளனர். (ஒ-ரி1-9)

# முன்னாள் அதிபரின் அஞ்சலி நிகழ்வு

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் சி.உலகநாதனின் அஞ்சலி நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பாடசாலையின் ஐயாத்துரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பழைய மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுக்கு, பாடசாலை சமூகம் சார்ந்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-ரி1-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சை எடுப்பதை விடுத்து நிதியத்துடன் பேசுங்கள்!

## சஜித் ஆலோசனை



கொழும்பு, டிசெ.11

**டொலர் பிச்சை கேட்டு வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளாமல், நிதி நெருக்கடியைப் போக்க சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துங்கள். அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் இறுதிநாள் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

அந்நியச் செலாவணிப் பிரச்சினை உள்ளது. இதற்கு நாளாந்தத் தீர்வுகளைத் தேடாமல் நிலையானதொரு நிதிக்கொள்கையைத் தயாரித்து உள்ளக மற்றும் வெளிநாட்டு நம்பிக்கையை வெல்லுங்கள். சர்வதேச நிதித்தரப்படுத்தல்களில் முன்னேற்றகரமான இடத்துக்கு வாருங்கள். அப்போது குறைந்த வட்டிக்கு டொலரைக் கடன் பெறமுடியும்.

உள்நாட்டில் இனவாதம், மதவாதத்தைப் பரப்பி விட்டு ஓமான், கட்டார் ஆகிய நாடுகளுக்கு சென்று டொலருக்கு கையேந்துகின்றனர். இறுதியாக இந்தியாவுக்கும் சென்றுவிட்டீர்கள். நிதி நெருக்கடியைப் போக்க மாற்றுவழிகள் உள்ளன. சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துங்கள். அதற்கு எமது முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும். ஏனெனில் இது எமது நாடு. அது வங்குரோத்து நிலைக்குச் செல்வதை நாம் விரும்பவில்லை.- என்றார். (எ-44)

# இராணுவம் உர விநியோகம் விவசாய அமைச்சர் எதற்கு?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

கொழும்பு, டிசெ.11

உர விநியோக நடவடிக்கைகள் அனைத்தும் இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்கப்படுமாக இருந்தால் நாட்டுக்கு விவசாயக அமைச்சர் அல்லது உரம் தொடர்பான அமைச்சர் ஒருவர் எதற்கு? என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது; இதன்மூலம் தன் அமைச்சரவையில் உள்ள விவசாய அமைச்சரும் உரம் தொடர்பான அமைச்சரும் அதற்குரிய அதிகாரிகளும் செயற்திறனற்றவர்கள் என்பதை ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்.

நாம் அரச உத்தியோகத்தர்கள் தொடர்பாக பூரண நம்பிக்கை வைத்துள்ளோம். பூரணமான முகாமைத்துவத்துடன் அவர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். விவசாயத்தை ஆரம்பிக்க அரசு மேற்கொள்ளும் இந்தப் பொறுப்பற்ற மற்றும் தன்னிச்சையான செயற்பாட்டின் காரணமாக நாட்டில் விரைவில் ஏற்படப்போகின்ற நிலையைத் தடுக்க முடியாது -என்றார். (எ-இ)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.11

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆங்கில மொழி மற்றும் ஆங்கில இலக்கிய டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 18 வயதுக்கு மேற்பட்டவர் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மட்டுமே இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் என்ற முகவரியூடாகவும் 021 2223374 என்ற தொலைபேசியூடாகவும் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (ஓ-ரீ1)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.11

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் தமிழ்மொழிக் கற்பித்தலில் சிறப்புக் கலைமாணிப்பட்ட கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களை, யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் என்ற முகவரியூடாகவும் 021 2223374 என்ற தொலைபேசியூடாகவும் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். (ஓ-ரீ1)

# ஈஸ்டர் தாக்குதல் சந்தேகத்தில் கைதானோர் குற்றமற்றவர்கள்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.11

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படும் வரையில் குற்றமற்றவர்கள் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது நீதித்துறைக்கு வெளியே யாரையும் தண்டிக்க முடியாது. 26 முக்கியமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குற்றவியல் நடைமுறைச் சட்ட விதிகளின்படி விசாரணை நடைபெற வேண்டும். இது ஒரு சிக்கலான விசாரணை. அரசியல்வாதிகள் விசாரணைகளில் ஈடுபடக்கூடாது. தவறு செய்தவர்களை நீதித்துறைதான் தீர்மானிக்கும். அரசு, எதிர்க்கட்சி, நாடாளுமன்றம், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அல்லது நான் தீர்மானிக்க முடியாது. -என்றார். (எ-இ)

# நியமனம் வழங்கல்

சாவகச்சேரி, டிசெ.11

சாவகச்சேரி பிரதேச மத்தியஸ்தர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட 22 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு, இன்று காலை 9 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-ரீ1-9)

# யாழ். இந்து ஆசிரியருக்கு விருது



2021ஆம் ஆண்டுக்கான உலகில் தலைசிறந்த ஆசிரியத்துவத்துக்கான விருது, யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் இ.இரமணனுக்குக் கிடைத்துள்ளது. கொரோனாத் தொற்று இடர் காலத்தில் தலைசிறந்த அர்ப்பணிப்புடன், எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி, கற்பித்தலில் புத்தாக்க முறைமைகளைப் புகுத்தி, நிகழ்நிலைக் கற்பித்தலில் மாணவர்கள் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கான வழிவகைகளைக் கையாண்டு, உலகின் அனைத்து தமிழ் மாணவர்களும் பயன்பெறும் வண்ணம் இலவசமாக ஆசிரியப் பணியை முன்னெடுத்தமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (ஓ-4)

# மாணவிகளை அச்சுறுத்தும் இளைஞர் கூட்டம்

தென்மராட்சி பிரதேசத்தில் பஸ் தரிப்பிடங்களில் காத்திருக்கும் மாணவிகளை தினமும் இளைஞர் கூட்டம் மோட்டார் சைக்கிள்களில் பயணித்து அச்சுறுத்தும் வகையில் செயற்படுகின்றது என்று பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர். பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் க.பொ.த. சாதாரண தர, உயர்தர மாணவிகளை அச்சுறுத்தும் வகையில் இளைஞர் கூட்டம் செயற்படுகின்றது. அதனால் அச்சத்துடன் காத்திருக்க [illegible] வேண்டியிருக்கின்றது என்று பெற்றோர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் சு.நிதிகேசனுக்கு பெற்றோர் முறையிட்டதையடுத்து அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடியுள்ளார்.

பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலைய மாணவிகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-9)

# கிளிநொச்சியில் பெண் கடத்தல்; ஏழு பேருக்கு விளக்கமறியல்!

கிளிநொச்சி, டிசெ. 11

பெண் ஒருவரைக் கடத்திச் சென்ற விவகாரத்தில் சாரதி உட்பட 7 பேரை விளக்கமறியலில் வைத்தது கிளிநொச்சி நீதிமன்றம்.

கடந்த 7ஆம் திகதி கிளிநொச்சியில் பெண்ணொருவர் பலவந்தமாக டிப்பரில் கடத்திச் செல்லப்பட்டார். டிப்பர் விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் உயிரிழந்தமை அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. இந்த விவகாரத்தில் சாரதியும் இன்னும் 6 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். சாரதியை எதிர்வரும் 21ஆம் திகதி வரையும் ஏனையவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-316)

# காலம் கடந்துவிட்டது

## மத்திய வங்கி பிரதி ஆளுநர் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லவேண்டிய [illegible] சந்தர்ப்பமகூட தாமதமாகியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டப்ளியூ.ஏ.விஜேவர்தன தெரிவித்துள்ளார். நாட்[illegible] அந்நியச் செலாவணிக் கையிருப்பானது 1.5 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது. இது இரண்டு வாரங்[illegible] என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு கையிருப்பு 1,587 மில்லியன் டொலர்!

**கொழும்பு, டிசெ. 11**

**இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பு ஆயிரத்து 587 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்படுகின்றது என்று இராஜாங்க அமைச்சரான ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.**



நாடாளுமன்றில் நிலையியல் கட்டளையின்கீழ் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாத் தொற்று நோயால் ஏற்பட்டுள்ள உலகளாவிய பொருளாதார நெருக்கடியால் மட்டுமல்ல, பல்வேறு அரசுகள் பொருளாதாரத்தை நிர்வகிப்பதாலும் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பு ஆயிரத்து 9.5 மில்லியன் அமெரிக்க டொலராகவும், சர்வதேச நாணய நிதிய கையிருப்பு 67 மில்லியன் அமெரிக்க டொலராகவும், விசேட கொள்வனவுக் கணக்கு நிதி 127.2 மில்லியன் அமெரிக்க டொலராகவும், தங்கம் கையிருப்பு 382.2 மில்லியன் டொலராகவும், ஏனைய கையிருப்பு 1.1 மில்லியன் அமெரிக்க டொலராகவும் காணப்படுகின்றது - என்றார். (ம-4)

## கொரியாவில் மீண்டும் வேலைவாய்ப்பு

கொரியாவில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த வேலைவாய்ப்பு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொரிய மொழிப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த 33 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து தென் கொரியா நோக்கிப் புறப்பட்டுள்ளனர். (ம-4)

## மசாஜ் நிலையங்களுக்கு விரைவில் புதிய விதிகள்

கொழும்பு, டிசெ. 11

ஆயுள்வேத மசாஜ் நிலையங்களை ஒழுங்குபடுத்த விரைவில் புதிய விதிகள் கொண்டு வரப்படும் என்று ஆயுள்வேத ஆணையத்தின் வைத்தியர் எம்.டி.ஜே.அபேகுணவர்தன தெரிவித்தார்.

சர்வதேச சுதேச மருத்துவம் தொடர்பான ஜனாதிபதி ஊடக மத்திய நிலையம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். தற்போது மசாஜ் நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கு குறிப்பிட்ட நிறுவனம் எதுவும் இல்லை. இதை ஒழுங்குபடுத்துவதற்கு விரைவில் புதிய விதிகள் கொண்டு வரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-4)

## கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.11

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால், 2021 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

60 வயதைப் பூர்த்தி செய்த கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும், பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள் விண்ணப்பப் படிவத்தைப் பிரதேச செயலக கலாசார கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

நாளைய தினத்துக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## நூல் வெளியீடு

வவுனியா, டிசெ.11

மருத்துவ கலாநிதி சரஸ்வதி பிரபாகரன் எழுதிய "நீரிழிவு நோயும் யோகாசனமும்" என்ற மருத்துவ நூல் வெளியீடு, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், சிறப்பு விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-ரி)

# பண்டிகைக் காலம் மிகவும் அவதானம்

## மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 11

பொதுமக்கள் பண்டிகைக் காலங்களில் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் எச்சரித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 500ஆகக் காணப்பட்ட நாளாந்தத் தொற்றாளர் எண்ணிக்கை, தற்போது 700 வரை அதிகரித்துள்ளமை விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். தொற்றாளர் எண்ணிக்கையை இதனைவிடக் குறைவடையச் செய்வதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாடுதிறக்கப்பட்டுள்ள நிலையில் வெவ்வேறு சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய தொற்றாளர் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

மகிழ்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்வுகளில் விருந்துபசாரங்களின் போது கொரோனாத் தொற்று அதிகமானோருக்குப் பரவக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகும். இதற்கு முன்னர் சிறிய கொத்தணிகள் ஏற்பட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், அலுவலகங்களில் ஒன்றாக உணவு உண்பவர்கள் மத்தியில் வைரஸ் பரவல் அதிகமாகக் காணப்பட்டமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

எனவே, பண்டிகைக் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளின்போது மிகவும் அவதானமாகச் செயற்படுங்கள். சுகாதார விதிமுறைகளை முறையாகப் பின்பற்றுங்கள்- என்றார். (ம-4,22)

## வெளிநாட்டுப் பண வரவு துல்லியமான விசாரணை

கொழும்பு, டிசெ. 11

வெளிநாடுகளில் இருந்து வரும் பணம் சம்பந்தமாக தற்போது, மிகத் துல்லியமான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எவ்வித காரணமும் இன்றி ஒருவர் மற்றுமொருவரின் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்தால், அதுபற்றி தேடி அறிய நடவடிக்கை எடுக்கப்படும். பணச் சலவைச் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறான வங்கிக் கணக்கைத் தடை செய்யும் அதிகாரமும் இலங்கை மத்திய வங்கிக்கு இருக்கின்றது. இதனிடையே வெளிநாடுகளில் தொழில் புரிவோர் உத்தியோகபூர்வமாக வங்கிச் சேவைகளை மாத்திரம் பயன்படுத்தி நாட்டுக்குப் பணத்தை அனுப்ப வேண்டும்- என்றார். (ம-4)

# மனித குலத்துக்கு ஒவ்வாத செயல்!

## சர்வமதக்குழு கண்டனம்

வவுனியா , டிசெ. 11

பாகிஸ்தானில் இலங்கைப் பொறியியலாளர் படுகொலை செய்யப்பட்டமை மனித குலத்துக்கு ஒவ்வாத செயற்பாடு என்று வவுனியா மாவட்ட சர்வமதக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வவுனியா மாவட்ட சர்வமதக் குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைப் பொறியியலாளர் பிரியந்த குமாரவின் கொடூரமான கொலையை வவுனியா மாவட்ட சர்வமதக் குழுவானது மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. மனித குலத்தில் இதுபோன்ற ஈனமான செயல்கள் இந்த உலகில் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

எனவே குற்றம் இழைத்தவர்கள் எவராயினும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்று நாம் பாகிஸ்தானிய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதுடன் துயரில் மூழ்கி இருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம-110)

# 6 மாதங்களில் மட்டும் 3,096 வாகனங்கள் உற்பத்தி

கொழும்பு, டிசெ. 11

நாட்டில் கடந்த 6 மாதங்களில் 3 ஆயிரத்து 96 வாகனங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்று கைத்தொழில் அமைச்சரான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு கொரோனா நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

அரசும், அரச நிறுவனங்களும் பொருளாதார நெருக்கடி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைக் கையாள்கின்றன. கடந்த பல தசாப்தங்களாக எடுக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தற்போதைய எதிர்க்கட்சிகள் ஆட்சியில் இருந்த போது பொருளாதாரத்தை அழித்து உற்பத்திப் பொறிமுறையை முடக்கிவிட்டன.

இரண்டு வருடங்களுக்குள் அரசு அற்புதங்களைச் செய்யும் என்று எதிர்பார்க்கின்றோம். - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எதுவும் மாறப்போவதில்லை

இலங்கை அரசின் செல் நெறி அதுவும் குறிப்பாக ராஜ பக்ச சகோதரர்களின் ஆட்சி எவ்வாறு இருக்கும் என்று ஆரூடம் கூறப்பட்டதோ அதை விட மோசமாகவே இருக்கின்றது – இருக்கப்போகின்றது. பூகோள மாற்றங்கள் எது நடந்தாலும், எவர் அழுத்தம் கொடுத்தாலும் எல்லாவற்றையும் தூக்கிக் கடாசி தாம் நினைத்ததை நடத்தி முடிப்போம் என்ற மமதையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இவற்றுக்கு ஆகப் பிந்திய சான்றாக, வடமேல் மாகாண ஆளுநர் நியமனம் நடந்திருக்கின்றது. முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட ஆளுநராக நியமனம் பெற்றிருக்கின்றார். இலங்கையின் சிவில் துறைகளில் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படுவது ஒன்றும் புதிதில்லைத்தான். ஆனால் கரன்னகொடவின் நியமனம் அதிலிருந்து முழுவதுமாக வேறுபடுகின்றது. சர்வதேசத்துக்கும் ராஜபக்சக்கள் தெளிவான செய்தியைச் சொல்லியிருக்கின்றார்கள். இலங்கை அரசோடு ஒத்தோடி உள்ளக விசாரணை, கலப்புப் பொறிமுறை என்று கதையளப்பவர்களுக்கும் இலங்கை அரசு குறிப்பாக ராஜபக்சக்கள் செருப்படி கொடுத்திருக்கின்றனர்.

ராஜபக்சக்களின் முதலாவது ஆட்சிக் காலத்தில், கொழும்பில் கப்பத்துக்கான கடத்தல், வெள்ளைவான் கடத்தல்கள் தொடக்கம் படுகொலைகள் வரையில் சர்வசாதாரணமானவை. பாடசாலை மாணவர்கள் உட்பட 11 பேர் கப்பத்துக்காக கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கில், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட சந்தேகநபராகப் பெயரிடப்பட்டிருந்தார்.


நல்லாட்சி அரசின் காலத்தில் மேற்படி வழக்கு ஓரளவாவது நீதியை நிலைநாட்டும் போக்கில் மறுபுறம் காலத்தை இழுத்தடிப்புச் செய்யும் வகையில் நகர்ந்தது. இதன்போது கடத்தப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பது வரையில் தகவல்கள் புலன்விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டன. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைதானவர்களின் வாக்குமூலங்களே முன்னாள் கடற்படைத்தளபதியை சந்தேகநபராக பெயரிடுவதற்கு ஆதாரங்களை முன்வைத்தன.

இப்படியொரு பின்புலத்தில், ராஜபக்சக்கள் தாங்கள் ஆட்சிக்கு வந்த மூன்றாவது காலத்திலிருந்து, தமது முதலாவது மற்றும் இரண்டாவது பதவிக் காலங்களில் குற்றமிழைத்தமைக்காக நல்லாட்சி அரசின் காலத்தில் சிறைவைக்கப்பட்டவர்களை விடுவித்தது. அந்த வரிசையில் வசந்த கரன்னகொடவையும் வழக்கிலிருந்து சந்தேகநபராக பெயரிட்டமையிலிருந்து சட்டமா அதிபர் திணைக்களம் கைவாங்கியது. ஆனாலும் அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட மனு இன்னமும் விசாரணையில் இருக்கும் நிலையில், கரன்னகொடவுக்கு 'ஆளுநர்' என்ற பதவி வழங்கி ஒரு பாதுகாப்புக் கவசத்தைக் கொடுத்துள்ளது ராஜபக்ச அரசு.

இந்த நாட்டில் நல்லிணக்கம் வரவேண்டும் என்று கதைப்பவர்களும், அரசுடன் பேசி தீர்வைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுரை கூறுபவர்களும், இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போதான மீறல்களுக்கு உள்ளகப் பொறிமுறை அல்லது கலப்புப் பொறிமுறை உசிதம் என்று கற்பிப்பவர்களும், ராஜபக்ச அரசின் இந்த நடவடிக்கையை எப்படி நோக்கப் போகின்றார்கள்?

இலங்கையின் ஆட்சிபீடம் சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையிலிருந்து மாறப்போவதேயில்லை. மைத்திரி தனது ஆட்சியில், இறுதிக்கட்டப் போரின்போது குற்றமிழைத்த படையணிக்குத் தலைமை தாங்கியதாக குற்றம் சுமத்தப்பட்ட சவேந்திர சில்வாவை நாட்டின் இராணுவத் தளபதியாக்கினார். ராஜபக்சக்கள், தமிழர்களைக் கொன்றதற்காக சிறைதண்டனை விதிக்கப்பட்டவர்களையும், கடத்தியதாக குற்றம் சுமத்தியவர்களையும் அதிஉயர் பதவிகளிலிருத்தி அழகுபார்க்கின்றனர்.

சிங்கள – பௌத்த கடும்போக்குச் சிந்தனையிலிருந்து இவர்கள் விடுபடப்போவதேயில்லை. நல்லிணக்கம் என்பதும் மலரப்போவதுமில்லை.




# மிரட்டும் வகையில் வெளியான ஞானசார தேரரின் குரல் பதிவு!

## நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் முன்னாள் நீதி அமைச்சர்



**கொழும்பு, டிசெ.11**

**'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவரின் செயற்பாடுகள் பிரச்சினைக்குரியது. அச்சுறுத்தல் விடுப்பதைப் போன்று வெளியாகியுள்ள அவரது குரல் பதிவு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.**

இவ்வாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரே நாடு ஒரே சட்டத்தை அமைப்பதற்கான செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள தேரர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டிலும் மற்றும் அமைதியின்மையான வகையில் நடந்துகொண்டமையாலும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு ஜனாதிபதியால் விடுதலை செய்யப்பட்டவர்.

இந்தச் செயலணி தொடர்பில் எவ்வாறான நிலைப்பாடு இருந்தாலும் அதற்கு நியமிக்கப்பட்டுள்ள தேரர் தொடர்பில் மகிழ்ச்சியடைய முடியாது. இவர் தொடர்பில் பல்வேறு குரல் பதிவுகள் வெளியாகியுள்ளன. இந்தச் சபையில் இருக்கும் பௌத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் என்னுடன் இணங்குவர் என்று நினைக்கின்றேன். இது பௌத்த தர்மத்தைப் பின்பற்றுவோருக்குப் பெரும் குழப்பமாக இருக்கின்றது. இவர் அச்சுறுத்தல்களை விடுக்கின்றார்.

இந்தக் குரல் பதிவு சர்வதேசத்துக்குச் செல்லும் நிலையில் இருக்கின்றது. இது தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கை என்ன? வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மத்திய கிழக்குத் தூதுவர்களை அழைத்து தனிப்பட்ட சட்டங்களுக்குப் பாதிப்பு இல்லாதவாறே 'ஒரே நாடு ஒரே சட்டம்' நடக்கும் என்று கூறியுள்ளார். அவ்வாறு தனிப்பட்ட சட்டத்துக்கானது அல்லவென்றால் எதற்காக இந்தச் செயலணியை நியமிக்க வேண்டும்? எவ்வாறான விடயங்களை முன்னெடுத்தாலும் நீதி அமைச்சரே அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அனைவரினதும் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கக்கேட்கின்றோம் - என்றார். (எ-22)

# இனம் குறிப்பிடாமல் பதிவுச் சான்றிதழ்கள்!

## சட்டமா அதிபரிடம் விளக்கம் கோரியது நீதிமன்றம்

கொழும்பு, டிசெ.11

பிறப்புச் சான்றிதழில் குழந்தையின் இனம் குறிப்பிடப்படாமல் பதிவு செய்வதற்கான சாத்தியம் உள்ளதா என்பதை எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி மன்றுக்கு அறிவிக்க வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்ட மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

நீதியரசர்களான சோபித ராஜகருணா, தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய அமர்வு, பதிவாளர் நாயகத்திடம் விசாரிக்குமாறு சட்ட மா அதிபருக்கு பதிவாளர் நாயகத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்யக் கோரி சட்டத்தரணி நுவான் போபகே தாக்கல் செய்த நீதிப் பேராணை மனுவை நேற்றுப் பரிசீலித்தபோதே இந்த உத்தரவு மேன்முறையீட்டு நீதிமன்றால் வழங்கப்பட்டது.

பிறப்புச் சான்றிதழில் இனத்தைச் சேர்க்கக் கூடாது என்ற கோரிக்கையைத் தொடர்ந்து, தனது மகனின் பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்ய மறுத்தமைக்கு எதிராக மனுதாரர் இந்த நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்திருந்தார். தனது கோரிக்கையை நிராகரித்த பதிவாளர் நாயகத்தின் முடிவு நியாயமானதல்ல என்றும், அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மீறப்பட்டுள்ளன என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை 12.11.2021 ஞாயிற்றுக்கிழமை கார்த்திகை 26
சுபநேரம் : 09.20 – 10.50
ராகுகாலம்: 04.50 – 06.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொற்றாளர்களுக்கு வேறொரு நாளில் பரீட்சை

கொழும்பு, டிசெ. 11
2020 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின் அழகியல் பாட செயன்முறைப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் தற்போது கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தால், வேறொரு நாளில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் இந்தத் தகவல் அனுப்பப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றால் தனிமைப்படுத்தலில் இருப்பவர்களும் இந்த நடைமுறையைப் பின்பற்றலாம்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது அதிபர்கள் ஊடாகவும் தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சைத் திணைக்களம் ஊடாகவும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (ஓ-ரி)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.11
ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தால் உயிர்,உடல்,உடைமைகளை இழந்து தத்தளிக்கும் உறவுகளின் வலிகளைச் சுமந்த இசை இறுவட்டு வெளியீடு எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை 6 மணிக்கு உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும். வடமராட்சி கிழக்கு கலைஞர்களை மையமாகக் கொண்டு இறுவட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

## வர்த்தகரை கடத்திக் கொள்ளை

வர்த்தகர் ஒருவரைக் காரில் கடத்தி, அவரிடமிருந்த நகைகள் மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் பம்பலப்பிட்டி லோரன்ஸ் மாவத்தையில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

திம்பிரிகஸ்யாய பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர், திருமண நிகழ்வுக்காக மனைவியுடன் சென்று, தனது காரை தரிப்பிடத்தில் நிறுத்திய போது, கைவிலங்கிடப்பட்டு கடத்தப்பட்டுள்ளார். கொள்ளையன் அவர் அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையிட்டதுடன், மனைவியை மண்டபத்துக்கு வெளியே அழைக்குமாறும் மிரட்டியுள்ளான். விபரீதத்தை உணர்ந்த வர்த்தகர், தனது மனைவியுடன் தமிழில் உரையாடி நிலைமையை தெரியப்படுத்தினார். இதனையடுத்து மனைவி பம்பலப்பிட்டி பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.வர்த்தகரின் ஏ.ரி.எம் அட்டையைப் பயன்படுத்தி, 30 ஆயிரம் ரூபா பணத்தையும் பெற்றுள்ளான். கொள்ளையன் பொலிஸாரைக் கண்டதும், காரிலிருந்து இறங்கித் தப்பியோடியுள்ளான். (ஓ-4)



# 1 கிலோ அரிசி ரூ. 500 ஐ தாண்டும்

கொழும்பு,டிசெ.11
**இலங்கையில் ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை 500 ரூபாவைத் தாண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

முன்னதாக ஒரு தொன் யூரியா 278 அமெரிக்க டொலருக்கு இறக்குமதி செய்யப்பட்டது. இன்று ஒரு தொன் யூரியாவின் விலை 1282 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. அந்த விலையில் பெறப்படும் யூரியாவை கொண்டு விவசாயம் செய்தால் ஒரு கிலோ அரிசி 500 ரூபாவைத் தாண்டும். இலங்கையில் 25 கிலோ யூரியா மூடை ஒன்று 9 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## மாணிக்கக்கல்லுக்கு விலை நிர்ணயிப்பதில் சிக்கல்

கொழும்பு,டிசெ.11
இரத்தினபுரியில் கண்டு பிடிக்கப்பட்ட 510 கிலோ கிராம் எடை கொண்ட நீல மாணிக்கக்கல்லுக்கு,250 மில்லியன் டொலர் நிர்ணய விலையை ஏற்க, இலங்கைப் பிரதிநிதிகள் மறுத்துள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்தார். இங்கிலாந்தின் பிரபல மாணிக்கக்கல் ஏல விற்பனை நிறுவனம் 250 மில்லியன் அமெரிக்க டொலரை விலையாக நிர்ணயம் செய்துள்ளது.

எனினும் மாணிக்கக் கல்லின் உரிமையாளர் மற்றும் மாணிக்கல் மற்றும் தங்காபரணங்கள் அதிகார சபையின் பிரதிநிதி கள் அதற்கு இணங்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## வடக்கில் இன்னும் பல தொல்பொருள் இடங்கள்

### விதுர விக்ரமநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.11
வடக்கில் நிலக்கண்ணிவெடி அச்சுறுத்தல்கள் உள்ள இடங்களிலும் தொல்பொருள் இடங்கள் உள்ளன. அங்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவையும் ஒதுக்கப்பட்ட இடங்களாக பிரகடனப்படுத்தப்படும்.

இவ்வாறு தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது வடக்கில் போர்க்காலத்தில் பல இடங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளமையால் இப்போதும் அந்த இடங்கள் அச்சுறுத்தலான இடங்களாகவே உள்ளன. அவ்வாறான பகுதிகளிலும் தொல்பொருள் இடங்கள் உள்ளன. இவற்றை ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. என்றார். (ஏ-22)

# வாழ்விடமில்லை

### குடும்பம் பரிதவிப்பு

முல்லைத்தீவு,டிசெ.11
ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி மாதிரிக் கிராமத்தில், வாழ்விடமின்றி 4 பிள்ளைகளைக் கொண்ட குடும்பமொன்று பரிதவித்து வருகின்றது.

நுவரெலியாவைச் சேர்ந்த துரைச்சாமி தியாளன் என்பவர் 2018 ஆம் ஆண்டு தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் கிளிநொச்சிக்கு வருகை தந்துள்ளார்.

கிளிநொச்சி விவேகானந்த நகர்ப்பகுதியில் சுமார் ஒரு வருடம் வசித்த குடும்பத்தினர் காணிப் பிரச்சினை காரணமாக, முரசுமோட்டை கிராம அலுவலர் பிரிவுக்கு இடமாறினர்.



அங்கு அவர்கள் வசித்த வீட்டின் உரிமையாளர்கள் வந்ததால், பதிவுகளை நீக்கி, திருமுறிகண்டி மாதிரிக் கிராமத்தில் பிறிதொரு நபருடைய வீட்டில் தற்காலிகமாக குடியமர்ந்துள்ளனர். எனினும் நிரந்தர இருப்பிடம் இல்லாது குடும்பப் பதிவை மேற்கொள்ள முடியாமலும், பிள்ளைகளை பாடசாலை அனுப்ப முடியாமலும் திண்டாடுகின்றனர்.

தமது மூன்று சிறுபிள்ளைகளுடன் விறகு வெட்டி விற்பனை செய்தே வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-4)

## குண்டு மீட்பு

யாழ்ப்பாணம்,டிசெ.11
மாதகல் கிழக்கு காஞ்சிபுரம் ஜே.150 கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீடொன்றில் காணியைத் துப்பரவு செய்த போது, மோட்டார் குண்டொன்றை வீட்டின் உரிமையாளர் அவதானித்துள்ளார்.

இது தொடர்பில் இளவாலை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், மோட்டார் குண்டொன்றை அடையாளம் கண்டனர்.

குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-4,125)

## கிளிநொச்சி மைதானத்தை உடன் சீரமைக்க வேண்டும்

### வினோ எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

கொழும்பு,டிசெ.11
கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு, கவனிப்பாரற்று இருக்கும் சர்வதேச தரத்திலான மைதானத்தின் நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது

இந்த மைதானத்தை எதிர்காலத்தில் முழுமையாக பராமரிப்பதற்கும் ஏனைய விடயங்களுக்கும் வடக்கு மாகாண சபையிடம் கையளிக்க வேண்டும். மன்னார் எமில் நகர் கிராமத்திலும் கடந்த காலத்தில் விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்புச்செய்து அதனை சர்வதேச சகல தரம் கொண்ட மைதானமாக உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. நிதி ஒதுக்கீடுகள் நிறுத்தப்பட்டு ஒப்பந்த காரர்கள் விலகியதனால் மிகுதி வேலைகள் கைவிடப்பட்டுள்ளன. ஜனாதிபதி ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தை அறிவித்தார். அரசியல் ரீதியாகவே வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன .எனவே இது உடனடியாக தடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஏ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்று பாரதியின் 139ஆவது பிறந்த தினமாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# பாரதி

## இனிய தமிழின் இலக்கியத் தீ!

**இராமபுரத்தூர் நிஷாந்தன்**
ஆசிரியர்
கிளி. இராமநாதபுரம் ம.வி



தமிழ் இலக்கிய உலகு கண்ட தன்னகரில்லாத ஒரு கவிஞன் மகாகவி. 1882 டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி தமிழ்நாட்டின் எட்டயபுரத்தில் சின்னச்சுவாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர். தமிழ்மீது மிகுந்த விருப்பம் கொண்ட சுப்பிரமணியன் தன் சிறுவயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கினார். எழுதும் கவிதைகளை பாடும் ஆற்றலையும் பெற்று வந்தார். இக்காரணம் கொண்டு இவரது கவிபாடும் ஆற்றலைக் கண்டு வியந்து இவரைப் பாராட்டி எட்டயபுர மன்னன் 'பாரதி' எனும் பட்டத்தை வழங்கி மதிப்பளித்தார். அன்று முதல் சுப்பிரமணிய பாரதியார் எனும் பெயர் கொண்டு அழைக்கப்பட்டார். ஒரு கவிஞனாக, எழுத்தாளனாக, ஆசிரியனாக, பத்திரிகையாளனாக, சமூக சீர்திருத்தவாதியாக, பன்முக ஆற்றல் கொண்டவனாக விளங்கினார் பாரதி.

### தமிழ்மொழி மீதான பாரதியின் ஈடுபாடு

தன் சிறுவயது முதலே தமிழ்மொழி மீது தீராத காதலும், பற்றும் கொண்டவர் பாரதி. இக்காரணம் கொண்டே, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று தமிழின் பெருமையைப் புகழ்ந்துரைக்கின்றார். இவருடைய பாடல்கள் மற்றும் கவிதைகளில் சொற்சுவை, எளிமையான மொழிநடை, எளிமையான சந்தம் என்பவை இவருக்கு தனிச்சிறப்பினைக் கொடுத்தன எனலாம். நவீன தமிழ்க்கவிதை மரபின் பிதாமகர் என்று பாரதி கூறப்படுவதற்கான காரணமும் இவையே எனலாம். இன்றும் பாரதியின் பாடல்களும் சரி, கவிதைகளும் சரி இலக்கிய ஆர்வலர்களின் உள்ளங்களில் நிறைந்துள்ளன என்று உறுதிபடக் கூறலாம். தமிழ்மொழியில் பல்வேறு கவிதைகள், பாடல்களைப் பாரதி பாடியிருந்தாலும், அவர் பாடிய கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய மூன்று நெடும்பாடல் தொகுப்புக்கள் பாரதியின் தமிழ்ப்பற்றினையும், அவரது கவி ஆற்றலையும் உலகுக்குப் பறைசாற்றியுள்ளன எனலாம். தமிழ்மொழி மட்டுமன்றி சமஸ்கிருதம், வங்காளம், ஹிந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகள் பலவற்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். பாரதியின் கவியாற்றலின் காரணமாக, மீசைக்கவிஞன், முண்டாசுக்கவிஞன், சக்திதாசன், மகாகவி எனும் பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றார் பாரதியார்.

### பாரதியின் வாழ்வியல்

பாரதி இயற்றிய கவிதைகள், மற்றும் பாடல்கள் பல்வேறுபட்ட பாடுபொருள்களில் அமையப்பெற்றுள்ளன. பெண் விடுதலைப் பாடல்கள், நாட்டுப்பற்றினை வெளிப்படுத்தும் பாடல்கள், சுதந்திரப்பாடல்கள், குழந்தைகளுக்கான பாடல்கள், கடவுள் பக்திப்பாடல்கள், பல்சுவைப் பாடல்கள், தேசிய கீதங்கள், ஞானப்பாடல்கள் என அவற்றை அடுக்கிக்கொண்டு போகலாம்.

பாரதி வாழ்ந்த காலத்தில் நிலவிய பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து பெண்விடுதலைக்கான சிந்தனைகளை தனது பாடல்களில் முதன்மைப்படுத்திப்பாடினார். 'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்றான் பாரதி. மேலும் அக்கால சமூகத்தில் நிலவிய சாதி எனும் வேறுபாட்டினை எதிர்த்து 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றும் 'காக்கை குருவி எங்கள் சாதியடி..' என்றும் உரைத்து நின்ற அற்புதக்கவி பாரதி. பிராமணராக விளங்கிய பாரதி சாதியம் பற்றி பேசும் தான் வாழும் சமூகத்தை வெறுத்து தான் அணிந்திருந்த பூணூலையே அறுத்து எறிந்தவர். இவ்வாறு தன் வாழ்வில் தனித்துவமான சிந்தனை படைத்தவராக தனித்துவமான பாதையில் பயணித்தவர் பாரதி.

**தேடிச் சோறு நிதந் தின்று**
**பல சின்னஞ் சிறு கதைகள் பேசி**
**மனம் வாடித் துன்பமிக உழன்று**
**பிறர் வாடப் பல செயல்கள் செய்து**
**நரை கூடிக் கிழப்பருவம் எய்தி**
**கொடுங் கூற்றுக் கிரை யெனப்பின் மாயும்**
**பல வேடிக்கை மனிதரைப் போலே**
**நான் வீழ்வே னென்று நினைத்தாயோ?**

எனும் பாடல் பாரதியின் மனவேட்கையினை அழகுற எடுத்துரைக்கின்றது.

பாரதியாரின் வாழ்வில் கண்ணம்மா எனும் பெண் முதன்மை பெறுகின்றார். கண்ணனையே அவர் கண்ணம்மாவாகக் கருதி காதல் கொள்கின்றார் பாரதி. பாரதி கண்ணம்மாவின் நினைப்பில் பாடுகின்றார்.

**காற்று வெளியிடைக் கண்ணம்மா நின்றன்**
**காதலை எண்ணிக் களிக்கின்றேன்**
**அமு தூற்றினை ஒத்த இதழ்களும் – நிலவு**
**ஊறித் ததும்பும் விழிகளும் – பத்து**
**மாற்றுப் பொன் ஒத்த நின் மேனியும் – இந்த**
**வையத்தில் யானுள்ள மட்டிலும் – எனை**
**வேற்று நினைவின்றித் தேற்றியே – இங்கோர்**
**விண்ணவனாகப் புரியுமே!**

அதாவது இந்த உலகம் தனில் நான் வசிக்கும் காலம் வரைக்கும் வேறு எந்த நினைவும் வராது இந்த உலகிலேயே ஒரு தேவனைப் போல உன் நினைவில் வாழ்ந்திடுவேன் எனப் பாரதி பாடுகின்றார்.

### திரையிசையிலும் பாரதியின் பெருமை

பாரதியாரின் பாடல்கள் திரையிசைப் பாடல்களாக வெளிவந்துள்ளன என்பதும் அவரது கவித்துவத்தின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது. 'சுட்டும் விழிச்சுடர் தான் கண்ணம்மா..', 'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா..' 'நிற்பதுவோ நடப்பதுவோ பறப்பதுவோ..', 'நல்லதோர் வீணை செய்து..', 'நின்னை சரண் அடைந்தேன் கண்ணம்மா..', 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா..' போன்ற பாடல்கள் இன்றும் பாரதியின் புகழ் கூறி திரையிசையில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.



### பாரதியின் இறுதிக்காலம்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், தனது 39ஆவது வயதில், தான் வழக்கமாக வழிபடச் செல்கின்ற திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோவிலுக்கு சென்றிருந்த சமயம் அங்கிருந்த கோவில் யானை தாக்கியதால் உடல் அளவில் பாதிக்கப்பட்ட இவர் சில காலத்தின் பின் 1921ஆம் ஆண்டு உயிர்நீத்தார். பாரதி எனும் தீ மறைந்தாலும் அவர் விட்டுச்சென்ற சுடர்கள் இன்றும், என்றும் எங்கள் இலக்கிய உலகினில் சுடர்விட்டு ஒளிர்ந்து கொண்டிருக்கும் என்பது திண்ணம்.

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** அன்புக்குரியவர்களால் சமீபத்தில் தோன்றிய ஏமாற்றம் மறையும். பணிச்சுமை இருக்கும். மனதில் உற்சாகம், தன்னம்பிக்கை கூடும். யோகம் உண்டாகும் நாள்.

**இடபம்:** புதிய முயற்சிகள் தொடங்க இன்று பொருத்தமான நாளாகும். தொழில், பணியில் சிறிதளவு முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் இருந்த சிரமங்கள் குறையும்.

**மிதுனம்:** கடந்த நாள்களில் இருந்த பதற்றம் முடிவுக்கு வரும். விமர்சனங்களால் மனதில் கசப்பு ஏற்பட அனுமதிக்க வேண்டாம். மனம் மகிழும் நாள். கடன் ஓரளவு குறையும்.

**கடகம்:** பொறுப்புடன் செயற்படுவதன் மூலம் நிம்மதி அடைவீர்கள். கலை ஒன்றைக் கற்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தினர் ஆதரவு உண்டு. குழப்பம் தீர்ந்து நிம்மதி வரும்.

**சிம்மம்:** கலகலப்பன நாள். பலரது வேலைகளை கவனிக்க வேண்டி வரும். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்லும் வார்த்தையை பிறர் தவறாக எடுக்க வாய்ப்புள்ளது. பணிச்சுமை காரணமாக மனதில் மிகுந்த பரபரப்பு இருக்கும்.

**கன்னி:** குதூகலமான நாள். எதிர் பார்த்த நன்மைகள் தக்க சமயத்தில் வரும். எதிர்பாராத நல்ல செய்தி வரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**துலாம்:** நீங்கள் நினைத்ததைவிட திட்டம் ஒன்று வெற்றிகரமாக முடியும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். முக்கிய விஷயத்தில் இருந்த தாமதம் நீங்கும். மகிழ்ச்சியான நிகழ்ச்சி ஒன்று நடைபெறும்.

**விருச்சிகம்:** நண்பர் ஒருவர் நல்ல செய்தியைத் தருவார். மகிழ்ச்சி கூடும். பூமி சம்பந்தமான விஷயங்களில் சாதகமான நிலை வரும். தாமதப்படுத்தப்பட்டு வந்த விஷயம் ஒன்றை முடிப்பீர்கள்.

**தனுசு:** பல நாள்களாகக் குறைந்திருந்த மன அமைதி மீளும். பல நாள் செய்த முயற்சி ஒன்றில் இன்று வெற்றி கிடைக்கும். பணியாளர்கள் வேலையில் முனைப்பாக இருப்பீர்கள்.

**மகரம்:** லேசான கவலைதரும்படியான விஷயம் இன்று நடக்கலாம். செலவுக்கேற்ப வரவு வரும். கற்பனைகளால் பயம் ஏற்படும். தள்ளிப்போன விஷயம் ஒன்று இன்று தடையின்றி நடைபெறும்.

**கும்பம்:** காலையில் கலகலப்பான சூழல் நிலவும். மன நிறைவு உண்டு. எடுத்த பணியை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். குதூகலம் கூடும். உடன் பணியாற்றும் ஒருவர் உங்களுக்கு பக்கபலமாக உதவி செய்வார்.

**மீனம்:** சகோதரர்களுடன் ஒத்துப் போங்கள். பொறாமைக்காரர் விலகுவார். உங்கள் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர், நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுற்றுலாவிகளை ஈர்க்க 'கேபிள் கார்' திட்டம்

**கொழும்பு,டிசெ.11**

**நுவரெலியா சுற்றுலாப் பிராந்தியத்தில் கேபிள் கார் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தத்தில், சுவிஸ் முதலீட்டாளர் ஒருவர் கைச்சாத்திட்டுள்ளார்.**

சுற்றுலா அமைச்சு மற்றும் சுற்றுலா சபையுடன் இணைந்து நகர அபிவிருத்தி அதிகார சபையால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

நானுஓயா ரயில் நிலையத்தில் இருந்து நுவரெலியா கிரிகோரி ஏரி வரை 4 கிலோ மீற்றர் தூரத்துக்கு சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த கேபிள் கார் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். 55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இந்தத் திட்டம் தொடங்கப்படவுள்ளதுடன், 18 மாதங்களுக்குள் முடிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ-4)

## மன்னார் வீதியில் கட்டாக்காலி மாடுகள்

மன்னார், டிசெ.11

மன்னார் தள்ளாடி வீதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கொழும்பு, யாழ்ப்பாணம், நானாட்டான் ஆகியவற்றின் பிரதான வீதியாகக் காணப்படும் இந்த வீதியில், 300க்கும் மேற்பட்ட மாடுகள் நடுவீதியில் நடமாடுகின்றன.

இதனால் போக்குவரத்துக்கு பல வழிகளிலும் இடையூறு ஏற்படுவதோடு விபத்துக்களும் ஏற்படுகின்றன.

ஆகவே ,போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில், கால்நடைகளைப் பராமரிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கால்நடை அதிகாரிகளுக்கு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-ரி1-213)

## எரிவாயு சிலிண்டர் லேபிளில் மோசடி

சிவப்பு சீல் லேபிள் ஒட்டப்பட்ட லிட்ரோ எரிவாயு சிலிண்டரை கொள்வனவு செய்தவர், அதனை வீட்டுக்கு எடுத்துச் சென்று லேபிளை அகற்றிய போது, பழைய வெள்ளை லேபிளுக்கு மேலாக சிவப்பு லேபல் சுற்றி ஒட்டப்பட்டிருந்ததைக் கண்டறிந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொகவந்தலாவப் பகுதியில் நடந்துள்ளது. லிட்ரோ காஸ் நிறுவனம் வாடிக்கையாளர்களை தவறாக வழிநடத்தும் முயற்சியாக பழைய எரிவாயு சிலிண்டரில் வெள்ளை லேபிளின் மேல் சிவப்பு லேபிளை ஒட்டியுள்ளது என்று பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்துள்ளார்.

லிட்ரோ காஸ் முகவர்களுக்கு புதிய சிலிண்டர்களை லிட்ரோ நிறுவனம் விநியோகித்து வருகின்றது. எனினும் பழைய கையிருப்புக்கள் இன்னும் மீளப் பெறப்படவில்லை என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர். (ஓ-4)



## சிறுவர்களை மகிழ்வூட்டல்

திருமலை,டிசெ.11

கிண்ணியா குறிஞ்சாக்கேணிப் படகுப் பாதை விபத்தால், பாதிக்கப்பட்ட சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் கிண்ணியா அல்அஸ்ஹர் வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பாடசாலையில் கல்வி கற்ற 4 மாணவர்கள் இந்த விபத்தில் உயிரிழந்தனர். மேலும் பாதிக்கப்பட்ட மாணவர்களும் இந்தப் பாடசாலையைச் சேர்ந்தவர்களே.

கிண்ணியா பிரதேச செயலக சிறுவர் பிரிவு மற்றும் கலாசாரப் பிரிவு இணைந்து நிகழ்வை நடத்தின. (ஓ-4)

## ஊழலுக்கு எதிரான இணையத் தளம்

கொழும்பு, டிசெ.11

இலங்கையில் நடைபெறும் ஊழல்களுக்கு எதிராக எழுச்சி பெற வேண்டும் என்று தனியார் மற்றும் குடிசார் சமூகத்துக்கு ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நெசனல் ஸ்ரீலங்கா நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த நிறுவனம் 2021ஆம் ஆண்டு ஊழலுக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு apesalli.lk என்ற இணையத்தளத்தை அறிமுகம் செய்துள்ளது.

இது ஊழலுக்கெதிரான சமூக செயற்பாட்டுக்கான பொதுமக்களின் தளம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் சரி பார்த்து உறுதி செய்ததைத் தொடர்ந்து முறைப்பாட்டை மேற்கொண்டவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்படும் என்று அந்த நிறுவனம் தெரிவித்தது. (எ-இ)

## கஞ்சா சுருட்டுடன் ஒருவர் கைது

யாழ்.நகரில் கஞ்சா சுருட்டை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட பொலிஸ் படையணிக்குக் கிடைத்த தகவலை அடுத்து, சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார். இளைஞனிடமிருந்து கஞ்சா சுருட்டு கைப்பற்றப்பட்டது. (ஓ-4-125)

## பொலிஸாருக்கு டிமிக்கி: பிரேஸில் பெண் கைது

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்ட பிரேஸில் நாட்டு இளம் பெண் ஒருவர் இலங்கையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைக்குள் பிரவேசிக்க முற்பட்ட அவரை, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் கைது செய்ததுடன் அவரை மீண்டும் பிரேஸிலுக்கு நாடு கடத்தினர்.

பிரேஸிலில் அரசு ஏற்கனவே அவரைக் கைது செய்யத் தயாரானபோது, அவர் தாய்லாந்துக்குத் தப்பிச் சென்றிருந்தார்.

அதனால் பிரேஸில் அரசு இன்டர்போலின் உதவியை நாடியது. அவருடைய தாய்லாந்து விசா காலாவதியானதால், தாய்லாந்தில் இருந்து இலங்கைக்குப் பயணித்துள்ளார்.

சர்வதேச பொலிஸாரிடம் சிக்காமல் இருப்பதற்காக வேறு நாட்டுக்குள் பிரவேசிக்கத் திட்டமிட்டார் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ஓ-4)



## கரைதுறைப்பற்று பாதீடு நிறைவேற்றம்

முல்லைத்தீவு, டிசெ.11

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபையின் தவிசாளர் கமலநாதன் விஜிந்தன் தலைமையில் இடம்பெற்ற அமர்வில், சமுகமளித்த 20 உறுப்பினர்களின் சம்மதத்தோடு 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரங்களுக்கு இணைந்து அபிவிருத்திக்காக 2.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-ரி1-246)

## குற்றங்களைத் தடுப்பதற்கு கிராமங்களுக்கு பொலிஸார்

யாழ்ப்பாணம்,டிசெ.11

ஒவ்வொரு கிராமத்துக்கும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் மக்கள் தொடர்பைப் பேணி கிராமத்தில் நடைபெறும் குற்றங்களைத் தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு கொடிகாமம், சாவகச்சேரி மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்திசிங்க கோரிக்கை விடுத்தார்.

கொடிகாமம் பொலிஸார், சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் மக்களுக்கு இடையிலான ஒன்று கூடல் வரணி மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமங்களில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்க வேண்டும். பிள்ளைகளின் செயற்பாடு தொடர்பில் பெற்றோர்கள் மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். தொலைபேசி பாவனை மூலம் பிள்ளைகள் தவறான வழிக்கு செல்வதைத் தடுப்பதற்கு பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். -என்றார். (ஓ-4-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகர் பகுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒரு மாதத்திற்கு வாடகைக்குத் தேவை.

**077 365 3989, 077 825 2839**

(CS 41549)(3/6)

## பெண்சமையல் உதவியாளர் தேவை

மானிப்பாயில் இயங்கும் **பிள்ளையார் இன்** ஹொட்டலிற்கு பெண்சமையல் உதவியாளர் தேவை.

வேலை நேரம் காலை 7.00 மணிமுதல் மதியம் 2.00 மணிவரை

இல.31 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**077 722 2715**


# சிறைச்சாலைக்கு இறைச்சிக்குள் கடத்தப்பட்ட ஐஸ் போதைப்பொருள்

கொழும்பு, டிசெ. 11

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையிலுள்ள கைதி ஒருவருக்கு வழங்குவதற்காக கொண்டுவரப்பட்ட அரிசிப் பொதியில் ஐஸ் என சந்தேகிக்கப்படும் 04 போதைப்பொருள் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது.

உணவுப் பொதியிலிருந்த இறைச்சித் துண்டுகளுக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்து நான்கு போதைப்பொருள் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நேற்றுமுற்பகல் 11.15 மணியளவில் கைதி ஒருவரிடம் ஒப்படைப்பதற்காக உணவுப் பொதி ஒன்றை கொண்டு வந்துள்ளார். எனினும், சிறைச்சாலை அவசர மூலோபாயப் படையின் அதிகாரிகள் அதனை பரிசோதித்த போது போதைப்பொருளைக் கண்டுபிடித்துள்ளனர். சந்தேகநபர் போதைப்பொருளுடன் மேலதிக விசாரணைகளுக்காக பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (த-இ)

# பாக்.பிரதமர் இம்ரானுக்கு ஹக்கீம் நன்றி தெரிவிப்பு

இலங்கை நபர், பாகிஸ்தானில் கொலை செய்யப்பட்டதையிட்டு அந்தநாட்டு பிரதமர் இம்ரான் கான் துரிதமாகச் செயற்பட்டு, அந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்டோருக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதையிட்டு அவருக்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் நன்றி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் நீதியமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று உரையாற்றியபோதே அவர் நன்றி தெரிவித்தார்.

இலங்கையர் ஒருவர் அங்கு அவ்வாறு கும்பலொன்றினால் மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்டதையிட்டு அதிர்ச்சியும், கவலையும் அடைந்தேன். ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கின்றேன். பலத்த கண்டனத்தைப் பதிவு செய்கின்றேன் என்று கூறிய அவர், அதனை மன்னிக்க முடியாத படுபாதகச் செயலென்றும் சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்கு வந்த சந்தர்ப்பத்தில், முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரியூட்டுவதை நிறுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியதையும் அவர் நினைவூட்டினார்.

பாகிஸ்தானுடன் இலங்கை சிறந்த நட்புறவை பேணி வருகிறது என குறிப்பிட்ட ஹக்கீம், கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டுவரும் நாடுகளிலொன்றான இலங்கை ஓர் இக்கட்டான சூழ்நிலையில் ஏனைய நாடுகள் பாகிஸ்தானுக்கு வந்து கிரிக்கெட் போட்டியில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொண்ட நிலையிலும், இலங்கை வீரர்கள் அதில் பங்குபற்றியிருந்த போது, பயங்கரவாதத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க நேர்ந்ததையும் கூறினார். (-இ)


## கண்ணீர் அஞ்சலி



சங்க அங்கத்தவர் **ந.இராஜமனோகரன்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நடராசா யோகேஸ்வரி**
(தும்பளை மேற்கு)

அவர்கள் 2021.12.09. ஆம் திகதி இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால், துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**

(CR 36187) (3/6)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியற்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் **திரு. சி. அருமைராஜன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு. பரஞ்சோதி சிவராசா**

அவர்கள் கடந்த (09.12.2021) வியாழக்கிழமை இறைபதமெய்திவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விரிவுரையாளர்கள், ஊழியர்கள்**
**கணித புள்ளிவிபரவியற்துறை**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**

(CS 41546) (4.6)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் **திரு.பாக்கியநாதன் சசீவன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவபாக்கியம் பாக்கியநாதன்**



மண்ணில்: 26.09.1951 விண்ணில்: 09.12.2021

அவர்கள் கடந்த (09.12.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(CR 36187) (3/6)

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ கொடிகாமம் திருநாவுச்சரசு மத்திய கல்லூரி.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 06 |
| 12 | 12 |
| 1951 | 2021 |



**திரு. தியாகராஜா சாந்தகுமாரன்**
**[ராசன்]**

அராலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. தியாகராஜா சாந்தகுமாரன் அவர்கள் 06.12.2021 அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை செல்வராணி தம்பதியினரின் அன்பு மருமகனும் ஜெயராணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற தியாகலிங்கம், சிவகாமசுந்தரி, சிவயோகசுந்தரி, சிவஞானசுந்தரி, காலஞ்சென்ற சிறிகரன், சிறிகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மாணல், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், ஆலாலசுந்தரம், பாலசிங்கம், நீலாதேவி, மொணிக்கா, காலஞ்சென்ற ஞானாம்பிகை, புவனேஸ்வரி, பத்மநாதன், கிருபாகரன், சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் மைத்துனரும் குணபாலசிங்கம் அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனடா நேரப்படி (சனிக் கிழமை (11.12.2021) மாலை 6.00 - இரவு 9.00 மணி வரை அஞ்சலிக்காக Chapel) Ridge Funeral Home, 8911 Woodbine Avenue Markham, ON L3R5G1 இல் அஞ்சலிக்கா வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் 12.12.2021 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 - மதியம் 12.00 மணி வரை நடைபெற்று தகனக்கிரியைகள் பி.ப. 12.30 - பி.ப. 1.00 மணி வரை Forest Lawn Crematorium 4570 Yonge Street Toronto, ON M2N5L6 இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளை நேரலையாக Live Stream) மூலம் பார்வையிடலாம். https://video.imb.com/channel/tWxR5yvw7JK

**தகவல் : T.கேசவகுமார் [கேசவன்] 0777240213**
**K.யனந்தி : 0772299660**

(ACO 15923) (3/6)

## பெயர் மாற்றம்

**கணபதி பாரதிதாசன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **பிரான்சிஸ் பாரதிதாசன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பிரான்சிஸ் பாரதிதாசன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(CS 18108) (3/6) **பிரான்சிஸ் பாரதிதாசன்**

## வேலைவாய்ப்பு

மல்லாவி, மாங்குளம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு மேசன் உடன் தேவை.

தங்குமிட வசதி உண்டு.

நாள்/ கிழமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதோடு தொடர்ச்சியாக வேலை வழங்கப்படும்.

**0777 120 945, 076 316 5738**

(CS 823) 1-6

## பணிநிலை வேண்டுகை

வல்வெட்டித்துறையில் இயங்கி வரும் யாழ். மாவட்டத்துக்கான S-Lon உற்பத்திகளின் ஏக விநியோகத்தருக்கு (S - Lon Distributor) கீழ்வரும் பதவிக்கு வேலையாட்கள் தேவை.



### Accounts Clerk - (Female)

**தகைமை** : க.பொ.த உ/த இல் வர்த்தகப் பிரிவில் சித்தியுடன் முன் அனுபவமும்

**வயது** : 20 தொடக்கம் 25 வரை

**வதிவிடம்** : வடமாராட்சி பிரதேசத்தில் அல்லது அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி போன்ற பிரதேசத்தில் வதிபவர்கள் விரும்பத்தக்கது.

(CR 36168) (3/6)

**தொடர்பு: 074 090 8283**

## கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21.02.1981 | 09.12.2021 |



**அருட்சோதி கிருஷ்ணராசா (கண்ணன்)**
(சாரதி கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்)

கடந்த (09.12.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரத்தில் இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**நலன்புரிச் சங்கம்**
**கமநல அபிவிருத்தி திணைக்களம்**
**யாழ்ப்பாணம்.**

(CS 824) 1-6

## மரண அறிவித்தல்

### இரத்தின சபாவதிக்குருக்கள் கேதீஷ்வரக்குருக்கள்

கொக்குவிலை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை சம்மந்தபிள்ளையார் கோயில் பிரதான குருவும் ஆகிய இரத்தினசபாவதிக்குருக்சள் கேதீஷ்வரக் குருக்கள் அவர்கள் கடந்த (09.12.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாவதி குருக்கள் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரயின் அன்புக் கணவரும், ராஜலக்சிமி பத்மலோஜினி பாலசந்திரசர்மா ஆகியோரின் அன்பு சகோதரனும், பிரதீபாவின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2021) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கரயான்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 831) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tertiary and Vocational Education Commission

# NVQ-L4

அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும்
அரச சான்றிதழ் ஒன்றை பெற நல்லதோர் வாய்ப்பு

## Preschool Teachers Training

NVQ Level-4
GCE (O/L),(A/L) க்கு தகைமைக்கு நிகரானதாகும்.

அரச, தனியார் மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை எதிர் பார்த்திருக்கும் அனைவருக்கும் ஓர் அரியவாய்ப்பு....

**Pre School Teachers Training**

முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறியில் இணைந்து (NVQ) Level-4 (ஒருவருட பாடநெறி) மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக் குழுவின் (TVEC) அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

இடம்
Green Field Community Centre Jaffna

நுழைவுத்தகைமை
O/L பரீட்சையில் தோற்றியிருத்தல் போதுமானது. A/L '3' பாடச்சித்தி அவசியமில்லை

இக் கற்கை நெறியானது
இம் மாதம் (December) 18ம் திகதி ஆரம்பமாகின்றது.

பதிவுகளுக்கு அழையுங்கள்: 077 569 7715

Pebbles academy


Pebbles Professional Cumpus
Hotline : +94750 84 74 74
Office: +94 6749 29 229
Email: Campus@Pebbles.academy

Pebbles Academy Registered with TVEC in Sri Lanka

(CS 82211-8)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
21 . 03 . 1959



உதிர்வு
22 . 11 . 2020

## நடராசா அருள்நாதன்

ஆண்டு ஒன்று ஆகிவிட்டது - அப்பா
ஆறவில்லையே எங்கள் மனம்
அனுதினமும் உங்கள் நினைவுகள்
நோயுற்ற போது கூட உடனிருந்து
அறிவுரைகள் கூறுவீர்கள் அப்பா
அத்தனையும் பொன் மொழிகள்
மலைபோல் துன்பம் வந்த போதெல்லாம்
மௌனமாய் இருப்பீர்களே
நீங்கள் இல்லை என்றாலும் ஆத்மாவாக
இருந்து நாங்கள் வாழும் வரை வழி நடத்துவீர்கள் அப்பா.

மனைவி - சகுந்தலா
பிள்ளைகள் - கவின், அருச்சுனா, சோனியா,
மருமக்கள் - திலக், சயந்தா, சத்தியா
பேரப்பிள்ளைகள் - அபிசாந், கிஷான், கியாஷ், கிர்த்திக், கியான், அக்ஷயா, அஹானா,

# மரண அறிவித்தல்

மண்ணில்
25 . 03 . 1933



விண்ணில்
09 . 12 . 2021

## ஆறுமுகம் அந்தோனியாப்பிள்ளை (Anto அக்கா)

நாரந்தனையை பிறப்பிடமாகவும், உடுவில், எகலியகொட (இரத்தினபுரி), கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அந்தோனி யாப்பிள்ளை அவர்கள் கடந்த (09.12.2021) வியாழக்கிழமை மாலை 7.00 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை-செலஸ்ரினா அவர்களின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சின்னட்டி-சீதேவன் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னட்டி ஆறுமுகம் (கிளி) அவர்களின் பாசமிகு மனைவியும், றொபட்ராஜா புஸ்பராணி (ராணி), அன்ரன் லூசிநாயகம் (பாபு) (Swiss), அன்ரன் ஜோசப் (கண்ணன்), காலஞ்சென்ற அலிஸ்ரன் மதுரநாயகம் (குமார்), அன்ரன்போல் (பாஸ்கர்- ஆசிரியர், இரா/அல்-அக்ஷா மு.ம.வி, எகலியகொட, கே/புனித மரியாள் த.ம.வி, எட்டியாந் தோட்ட), பிரதி அதிபர் ஹோ/இராஜகிரிய றோ.க.த.பா, இராஜகிரிய), (அதிபர், கொ/புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி, கொச்சிக்கடை, கொழும்பு-13), (பிரதி அதிபர், கொ/புனித மரியாள் றோ.க.த.க.பா, பம்பலப்பிட்டி, கொழும்பு-4), அன்ரன் யூட் (சந்திரன்-Swiss) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற றொபேட்ராஜா, காந்திமதி (Swiss), பிரேமலதா, காலஞ்சென்ற அமலராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், வினிஸ்ரன் சங்கீதாவின் அன்பு அம்மம்மாவும், டொமினிக்அலன் டொறின், டிலான் ஜொய்சி, அனோஜன், அருண் (Swiss), அஜித்தா (Swiss), ரஷ்னா எமிலி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (10.12.2021) வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு மல்வம் திருக்குடும்ப மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக மல்வம் / திருக்குடும்ப மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப் பட்டது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"அன்ரனி வாசா"
நாகம்மாள் வீதி, உடுவில்,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்
021 224 0914
0777281617

(CR 5735)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 . 04 . 1943



மறைவு
22 . 11 . 2020

திதி : அட்டமி

கடந்த (22.11.2020) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பவிளக்கு

## அமரர் மகேஸ்வரி அருளம்பலம்

அவர்களின் நினைவு நாள் இன்று 11.12.2021 சனிக்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"தாய் என்னும் தீபம்
இந்த உலகில்
சுடர் விட்டு எரிவதால் தான்
பாசம் என்னும் ஒளி
இந்த உலகில்
இன்னமும் மின்னி வருகிறது"

"மனோன்மணி வாசா"
...பாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

மகள் - சகுந்தலா
மருமகன் - செல்வராஜா
பேர்த்தி - துவாரகா.

(CS/41520)(4.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஈர விழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 02 . 1987

மறைவு 22 . 11 . 2020



### அமரர் கணபதிப்பிள்ளை அழகேந்திரன் (அழகன்)

(பழைய மாணவன் யாழ். இந்துக்கல்லூரி உயர்தர கணிதப்பிரிவு-2006)

**திதி:வளர்பிறை அட்டமி**

அழகன் நீ எமைவிட்டுப்பிரிந்து ஆண்டொன்று!
ஏற்க மறுக்கிறதடா - அழகா
பஞ்சபாண்டவர்களில் கடைசியடா - நீ
ஏனடா முந்திவிட்டாய் முடியவில்லை - அழகா
நீ பிரிந்த 22 ம் நாள் மாலை 4 மணிக்கு
ஒவ்வொரு மாதமும் அப்பாவும் அம்மாவும்
விம்மி அழுது அழுது அழமுடியாமலே போய்விட்டார்களடா- அழகா
தன்பசி மறந்து உன் பசி தீர்க்க காலமெல்லாம் காத்திருந்த
அம்மா போல ஒரு அம்மாவை ஏனடா விட்டுப்பிரிந்தாயடா - அழகா
அப்பாவுக்கு கடைப்பிள்ளை என்றதாலோ இன்னும்
உன் நினைவிலிருந்து மீளவில்லையடா - அழகா
**"அம்மா நீங்க போங்கோ வீட்டை நான் வாறேன்"** என்று சொல்லிவிட்டு
இன்னும் வரவில்லை என்று அம்மா கதறுகின்றாவடா - அழகா
எங்குதான் போய்விட்டாயடா!
ஏற்க மறுத்தாலும் உனக்காக உன் வாரிசுகளை அணைக்கின்றோம்.
கனத்த இதயங்களுடன் அழகா

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்து சிதம்பர சவுந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வர பெருமானின் பாதாரங்களை வேண்டி நிற்கின்றோம்.

**நீலிப்பந்தனை, காரைநகர்.** நினைவுகளுடன்: **குடும்பத்தினர்.**

(CR 5747) 1-6


**வேலை வாய்ப்பு**

Store Keeper, Security வெள்ளவத்தையில் கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு ஸ்டோர் கீப்பர் மற்றும் காவலாளி தொழில் செய்யக் கூடிய ஒருவர் தேவை. சம்பளம் 40,000/-

**Contact: 077 773 3122** (CR 36186) (3.6)


## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 02 . 1944

மறைவு 10 . 12 . 2021



### கணபதிப்பிள்ளை பரமசாமி

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் செட்டிகுளம், கொழும்பு, இணுவில் - வட்டுவினியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பரமசாமி அவர்கள் 10.12.2021 அன்று காலமானார்.

அன்னார் செட்டிகுளத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகனும் இணுவில் மேற்கைச் சேர்ந்த காலம் சென்ற் தில்லையம்பலம் தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் சந்திரபவானியின் அன்புக் கணவரும் தர்ஷினி, பிரணவன், ஹம்சவாகினி, துர்காஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாகரன், வாகீசன், அர்ஜுனாவின் மாமனாரும் நிகிலேஷ், கிபிலாஷ், தீக்ஷா, வினேஷ்தீரன், ஆதிக் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சுபாரத்தினம், மகேஸ்வரி, காலஞ்சென்ற கனகேஸ்வரி, சரஸ்வதி, காலஞ்சென்ற நவரத்தினராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CS 828) 1-6

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் நாகேஸ்வரன் (சிறி)

**(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப அலுவலர் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை)**

சாவகச்சேரி, நுணாவில் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நாகேஸ்வரன் அவர்கள் கடந்த (09.12.2021) அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், பொன்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா இராசபூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும், இரஞ்சினி சுபத்திராவின் (ரஞ்சி) அன்புக் கணவரும், செந்தூரன் (கனடா), கௌசலா (சிங்கப்பூர்), லவணன் (UK) மற்றும் லோகுலன் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வித்தியா(கனடா), மகீந்திரன் (சிங்கப்பூர்), யாழினி (UK), நிவேதிதா (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பத்திமினி சுதந்திரா, தேவந்திர சிறிகாந்தா, கலாயினி சித்திரா, காலஞ்சென்ற ஜெகநாதன் (செந்தி), ஜீவமதி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மிலன், ரிஷி, சாருமிதா, சரண்யன், சர்வினி, ரக்ஷிதா, யதுஸ், தேசன் ஆகி யோரின் பிரியமான பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 13.12.2021 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணிக்கு தகனக்கிரிகைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**"சிறிநிவாஸ்"**
**நுணாவில் கல்வயல் வீதி,**
**நுணாவில் மத்தி, சாவகச்சேரி.**
**தொலைபேசி:- 021 227 1092 மகன்:- 077 237 0798**

(CR 5748) 1-6

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 01 . 1940

இறப்பு 10 . 12 . 2021



### சின்னப்பு சுப்பிரமணியம்

**(ஏழாலை மணியம்)**

யாழ். ஏழாலையை பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (10.12.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு புதல்வரும், காலஞ்சென்றவர்களான நடராஜா, திருநாவுக்கரசு, விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மரு மகனும், நாகம்மா அவர்களின் அன்புக் கணவரும், உதயகுமார் (சுவிற்சர்லாந்து), தேவலதா (கனடா), பிரேமலதா (பிரான்ஸ்), உதயராசா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணலதா, சர்வானந்தம், ஜெகநாதன், தாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவேக், விநேக், நவகீர்தன், சாஜினி, விதுஷிகன், தர்சிகன், பிரியந்தி, ரதுசன், ஶ்ரீராம், ராகவி, பிரணவி, சிவப்பிரியா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.12.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று முற்பகல் 10 மணியளவில் சிறுப்பிட்டி மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக சிறுப்பிட்டி மேற்கு பத்தகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு :**
**உதயகுமார் (சுவிற்சர்லாந்து) - +41 793 618 700**
**தேவலதா (கனடா) - +1 437 992 4802**
**பிரேமலதா (பிரான்ஸ் ) - +33 753 607 120 (+94 76 489 3365)**
**உதயராசா (அமெரிக்கா ) - +18 622 242 945 (+94 76 730 3584)**

(CS 827) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அமைச்சின் செயலர் உள்ளிட்ட குழுவினருக்கு மன்று அழைப்பாணை

கொழும்பு, டிசெ. 11

**ஐந்தாம் தர புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை தேசிய பாடசாலைகளில் இணைத்துக்கொள்வதற்கான பரிந்துரைகளை முன்வைக்குமாறு கோரி தாக்கல் செய்யட்ட ரிட் மனு தொடர்பில், கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினரை எதிர்வரும் ஜனவரி 19ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.**

இந்த மனு நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி சாந்த ஜயவர்தனவின் பூர்வாங்க வாக்குமூலங்களை பரிசீலித்த நீதிமன்றம் இந்த மனுவை விசாரிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பத்து மாணவர்களின் பெற்றோரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கல்வி அமைச்சின் செயலாளர், தேசிய பாடசாலைகளின் பணிப்பாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரபல பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் அசாதாரணமாக அதிகரித்துள்ளமையால் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளுடன் சித்தியடைந்துள்ள போதிலும் தமது பிள்ளைகள் பிரபல பாடசாலைக்குள் பிரவேசிக்க முடியவில்லை என மனுதாரர்கள் தமது மனுக்களில் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்று சித்தியடைந்த தமது பிள்ளைகளுக்கு பெரும் அநீதி இழைக்கப்படுவதாக அவர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளை வழங்கும் முறைமையை உருவாக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிடுமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது. (த-இ)

# கருத்தமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.11

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சூம் செயலி ஊடான மருத்துவக் கருத்தமர்வு பிரதி சனிக்கிழமை தோறும் நடைபெற்று வருகின்றது.

இந்த வாரம் "பாலியல் ஆரோக்கியமும் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளும்" எனும் தலைப்பில் இரவு 8 மணி தொடக்கம் 9 மணி வரை கருத்தமர்வு நடைபெறும்.

சூம் செயலி 899 8528 2023 என்ற இலக்கத்தில் 354485 என்ற கடவுச்சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ளலாம். (த-4)

## ஆர்ப்பாட்டத் தடைக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

*உயர்நீதிமன்றில் ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்தது*

கொழும்பு, டிசெ. 11

ஐக்கிய மக்கள் சக்தி, கடந்த மாதம் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது அரசாங்கத்தால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டமைக்கு எதிராக அந்தக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிராகப் பெரும் எதிர்ப்பு போராட்டமொன்றைக் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது.

அந்தப்போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பொதுமக்கள் கொழும்புக்கு வருகை தந்தனர்.

எனினும், மக்களுக்கு பொலிஸார் பல்வேறு வழிகளிலும் தடைகளை ஏற்படுத்தினர்.

இவ்வாறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டமைக்கு எதிராக விரைவில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே அறிவித்திருந்த நிலையிலேயே கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (த-இ)

## பின்தங்கிய பிரதேசங்களில் 4 வருடங்கள் கட்டாயப் பணி

மருத்துவர்களுக்கு கட்டுப்பாடு விதிப்பு

பின்தங்கிய பிரதேசங்களுக்கு நியமிக்கப்படும் மருத்துவர்கள் நான்கு வருடங்கள் அந்த மருத்துவமனைகளிலேயே பணியாற்ற வேண்டும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தொலைதூரப் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளின் சுகாதாரச் சேவைகளை மேலும் வினைத்திறன் மற்றும் நெறிப்படுத்தும் நோக்கில் ஆயிரம் மருத்துவக் குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தத்திட்டம் முழுமையாக செயற்படுத்தப்படவுள்ளது. கடினமான பிரதேசங்களில் உத்தியோகபூர்வ குடியிருப்புகளை வழங்குவதன் மூலம் மருத்துவர்கள் திருப்திகரமான சேவையை வழங்க முடியும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரவிருக்கும் விடுமுறை மற்றும் பண்டிகைகளை எவ்வாறு முன்னெடுக்கவேண்டும் என்பது குறித்து, கலந்துரையாடல்கள் மூலம் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## தமிழ் பேசும் மக்களை பிரிப்பதற்கு திட்டங்கள்

*நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு*

தமிழ் பேசும் மக்களை பிரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு, நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு, சமுர்த்தி உள்ளக பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில் அரசாங்கத்தின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிராக வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிக்க வேண்டும். விசேடமாக நீங்கள் தமிழ் பேசும் உறுப்பினராக இருந்தால், இதற்கு ஆதரவாக வாக்களிக்க நீங்கள் சில நிபந்தனைகளை விதிக்க வேண்டும்.

நீண்டகாலமாக சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, முகநூல் பதிவுகளுக்காக சிறைகளிலுள்ளவர்களின் விடுதலை, வடக்கு கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பை தடுத்து நிறுத்துங்கள்." என நிபந்தனைகளை வைத்து நீங்கள் வாக்களிக்கலாம்.

அதேபோன்று முஸ்லிம் உறுப்பினர்களாக இருந்தால், உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத்தால் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகதத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் விடுதலை, கொரோனாவால் உயிரிழப்போரின் ஜனாசாக்களை ஓட்டமாவடியில் அடக்கம் செய்வதனை நிறுத்துங்கள், ஞானசார தேரர் தலைமையிலான செயலணியை கலையுங்கள்." உள்ளிட்ட நிபந்தனைகளை வைத்து நீங்கள் வாக்களிக்கலாம். என்றார். (த-22)

# அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது இலங்கை!

*எதிர்க்கட்சி எம்.பி. சபையில் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 1

"இந்த நாட்டை 'வன் மேன் ஷோ' மூலமாக மீட்டெடுக்க முடியாது. அவசர சிகிச்சைப் பிரிவில் ஒப்படைக்கப்பட்ட நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு ராஜபக்சவினரின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசே காரணமாகும்."

இவ்வாறு, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன சபையில் தெரிவித்தார். சபையில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசை கையில் எடுத்ததிலிருந்து நாட்டின் சகல துறைகளும் வீழ்ச்சி கண்டுள்ளன. பொருளாதாரம் சரிந்துவிட்டது. மக்களை வரிசையில் நிற்கவைத்து விட்டீர்கள். நாடே நிதி நெருக்கடிக்குள் வீழ்ச்சிகண்டு விட்டது. வரவு செலவுத் திட்டத்தைக் கூட கடன்களில் கையாள வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான் நாடு கடன்களில் சிக்க ஆரம்பித்தது. அப்போதைய நிதி அமைச்சர் இன்று பிரதமர், அப்போதைய மத்திய வங்கி ஆளுநரே இன்றும் ஆளுநராக உள்ளார். இவர்களால் மீண்டும் அதே பயணத்தை மட்டுமே முன்னெடுக்க முடியும்.

உலகில் உள்ள நாடுகளில் தமது வெளிநாட்டு கையிருப்பை ஒரு பில்லியனுக்கும் குறைவாகக் கொண்டுள்ள நாடொன்று இருக்கும் என்றால் அது இலங்கை எனப் பதிவு செய்துகொள்ள வேண்டும். அந்த எவு மோசமான நிலைக்கு நாடு சென்றுள்ளது. இந்தநிலையில் எந்த நாடும் எமக்குக் கடன் கொடுக்காது. அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரசில் இருக்கும் ஒரு சிலர் நாட்டின் நிலைமைகளை விமர்சித்துவிட்டு இப்போது வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்க முடியுமா? இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்தால் நாடு விரைவாக நாசமடையும். அவ்வாறான திட்டங்களே இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளன. குறுகிய காலத் திட்டங்களைச் சமர்ப்பித்து நாட்டின் நிதி நெருக்கடியைக் கையாள முடியாது. நாடு இதனைத் தாண்டிய பெரும் பொறிக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. எமது பிணைகளைக் கூடப் பெற்றுக்கொள்ள எவரும் தயாரில்லை. அப்படியே பெற்றுக்கொள்ள வந்தாலும் கறுப்புப் பண வியாபாரிகள் மட்டுமே வருவார்கள்.

அவ்வாறான கறுப்புப் பணக் கோஷ்டியொன்று 2022 ஆம் ஆண்டில் நாட்டை ஆக்கிரமிக்கப் போகின்றது என்ற தகவலும் எமக்குக் கிடைத்துள்ளது." என்றார். (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'பட்ஜெட்'...*

பாதீட்டுக்கு ஆதரவாக 157 வாக்குகளும், எதிராக 64 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன்படி மேலதிக 93 வாக்குகளால் பாதீடு நிறைவேறியது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், வரவு செலவுத் திட்டத்தின் இறுதிநாள் குழுநிலை விவாதம் ஆரம்பமானது.

ஆளும், எதிரணி உறுப்பினர்கள் உரையாற்றிய பின்னர், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச பதிலளித்து உரையாற்றினார். பாதீட்டில் மேற்கொள்ளப்படும் சில திருத்தங்களையும் முன்வைத்தார்.

எதிரணியின் கோரிக்கையின் பிரகாரம் மூன்றாம் வாசிப்புமீது மாலை 6.08 மணியளவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், அதன் தோழமைக்கட்சிகளும் ஆதரவாக வாக்களித்தன.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஐக்கிய தேசியக்கட்சி என்பன எதிராக வாக்களித்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பட்ஜட்டை எதிர்த்து வாக்களித்தாலும் அந்தக்கட்சியின் நான்கு உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். அதேபோல ரிஷாத் பதியுதீன் எதிர்த்து வாக்களித்திருந்தாலும் அவரது அணியை சார்ந்த மூன்று உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் 2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டவரைவு இரண்டாம் வாசிப்பு (வரவுசெலவுத்திட்ட உரை) நவம்பர் மாதம் 12 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது.

நவம்பர் 13 சனிக்கிழமை தொடக்கம் நவம்பர் 22ஆம் திகதி வரை 07 நாள்கள் ஒதுக்கீட்டுச் சட்டவரைவின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது.

நவம்பர் 22ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 153 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நவம்பர் 23ஆம் திகதி குழுநிலை விவாதம் ஆரம்பமானதுடன், சனிக்கிழமைகள் உள்ளடங்கலாக நேற்றுவரைவரை (டிசெம்பர் 10) 16 நாள்கள் குழுநிலை விவாதம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-44)

*பூஸ்டர்...*

மாறு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட கலந்துரையாடலின்போது, கொரோனாத்தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கான விசேட குழு உறுப்பினர்களுக்கு இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

இரண்டாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு 03 மாதங்கள் நிறைவடைந்த அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெறுவர். அதன்படி, தடுப்பூசி வழங்கப்படும் எந்தவோர் இடத்திலும் இன்று தொடக்கம் தினசரி பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கேற்ப, இன்றைய நாள்களில் அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளிகளில் அதிக சதவீதமானவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களாக அடையாளம்காணப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் இள வயதுடையவர்கள் என்று சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

கொரோனாத் தொற்றுக்கு ஆளாகுதல் மற்றும் இறப்பு எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வதற்காக தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். இது தொடர்பாக இளம் வயதினருக்கு தெளிவுபடுத்தி, விரைவாகத் தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், பொது இடங்களுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக தற்போது சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளது. அதைக் கருத்திற்கொண்டு, எதிர்காலத்தில் பொது இடங்களுக்குச் செல்லும்போது தடுப்பூசி அட்டையைக் கொண்டுசெல்வதைக் கட்டாயமாக்க கொரோனா கட்டுப்பாட்டுக் குழு தீர்மானித்தது.

இதேவேளை, 16 தொடக்கம் 19 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகளுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியையும் மற்றும் 12 தொடக்கம்15 வயதுடைய பிள்ளைகள் அனைவருக்கும் முதலாவது தடுப்பூசியை வழங்குவதற்கும் அனுமதிக் கிடைத்துள்ளது. இதன்படி கல்வி அமைச்சுடன் இணைந்து திட்டமிட்டு, தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டது. (த)

*30 வயதுக்கு...*

ருக்கும் (தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் பணிபுரிவோர், சுகாதாரத்துறை சாராத முன்னிலை ஊழியர்கள்) மூன்றாவது தடுப்பூசி (பைஸர்) வழங்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும், நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் குறித்த 3ஆவது தடுப்பூசி வழங்கப்படவுள்ளது - என்று மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில், மாகாணப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

மேற்குறிப்பிடப்பட்ட வகையிலுள்ள நபர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று ஆகக்குறைந்தது மூன்று மாதங்கள் இடைவெளியின் பின்னர் 3ஆவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.

இரண்டு தடவைகள் கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள், தொற்று உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களின் பின்னர் குறித்த 3ஆவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே மேற்குறிப்பிட்டவர்களில் சினோபார்ம் அல்லது ஏதாவது ஒரு கொரோனாத் தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே தமது தடுப்பூசி அட்டையை சமர்ப்பித்து தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியை (பைஸர்) பெற்றுக்கொள்ள முடியும்.

தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் தொடர்பாக அந்தந்த பிரதேசங்களுக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மூலமாக மக்களுக்கு அறிவிக்கப்படும்.

தடுப்பூசி அல்லது வேறுமருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு மார்கழி மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் சனிக்கிழமைகளில் தடுப்பூசி வழங்கப்படும். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ். போதனா மருத்துவமனை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது மருத்துவமனைகளிலும் இந்தத்தடுப்பூசிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

30 வயதுக்கு [illegible] றான நிலைமை[illegible] தேகிப்பவர்கள், தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள், தடுப்பூசி வழங்கும் நிலையத்திலுள்ள மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியை (பைஸர்) பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும். - என்று குறிப்பிட்டுள்ளார். (த-26)

*சாட்சியங்களை...*

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று மேற்கொள்ளப்பட்ட தீப்பந்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினையானது வெறுமனே ஒரு மனித உரிமை பிரச்சினையாகப் பார்க்கப்படுகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் விடுதலை, நில அபகரிப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு மனித உரிமை பேரவை 12 வருடங்களாக எந்தவொரு தீர்வையும் காணமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக தமிழ் மக்கள் நீண்டகாலமாக மனித உரிமை பேரவையை எதிர்பார்த்திருந்தது ஏமாற்றமாக இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களுடைய இந்த பிரச்சினையை வெறுமனே சிறுபான்மைகுழுக்கள் என்று மேற்குலகம் நோக்குகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிரோடு இல்லையெனில், அரசாங்கம் அதை அறிவித்து பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும். அதற்கு அடுத்தகட்டமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதற்கான ஒரு நிலைமைக்கு செல்வதற்கு சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். - என்றார். (த-110)

*இலங்கை...*

பூர்வ பயணம் மேற்கொண்டு எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

அவர், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உதவி நிர்வாகி மற்றும் அதன் ஆசிய - பசிபிக் பிராந்திய பணிப்பாளராகவும் உள்ளார்.

அண்மையில் முடிவடைந்த உலக கால நிலை மாநாட்டின் முடிவுகள் மற்றும் பிராந்தியத்தினுள் கொரோனாத் தொற்றுக்குப் பிந்திய பொருளாதார மீட்சி என்பவற்றை ஆராய்வதே உதவி செயலாளர் நாயகத்தின் இலங்கைப் பயணத்தின் நோக்கமாகும்.

இதன்போது அவர் விசேடமாக மனிதவள அபிவிருத்தித்துறையின் வெற்றிக்காக, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை விரைவுபடுத்துவதில் கவனம் செலுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

*மணல்....*

வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது.

வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் குறித்த வாகனத்தை நிறுத்தியபோது வாகனத்தை நிறுத்தாது சாரதி தொடர்ந்தும் பயணித்த நிலையில், விசேட அதிரடிப்படையினர் துரத்திச் சென்றபோது கட்டுப்பாட்டை இழந்த வாகனம் தொலைத்தொடர்புக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

[illegible]வர்கள் அங்கிருந்து தப்பி[illegible]யில் வாகனத்தை கைப்பற்றிய பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்று அதிகாலை குடத்தனை பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த உழவு இயந்திர சாரதியை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்து பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (த-20)

*விபத்தில்...*

விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரக்குருக்கள் (வயது 70) என்பவரே உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் மதியம் கோவிலில் பூசை செய்துவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது எதிரே வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து ஏற்பட்டது என்று கூறப்பட்டது. படுகாயமடைந்த குருக்கள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தநிலையில், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (சு-26)

*அதிகாலை..*

கொண்டிருந்த தனியார் சொகுசு பஸ், வேகக் கட்டுப்பாட்டை இழந்து, விபத்துக்குள்ளாகி, அருகிலுள்ள வயலுக்குள் பாய்ந்தது. அதனால், பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவர் உயிரிழந்தார். 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் மதவாச்சிக்கும் இகிரிகொல்லாவ பகுதிக்கும் இடைப்பட்ட வளைவில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் ரம்பேவ மற்றும் அநுராதபுரம் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-இ)

*நல்லூரில்....*

நான்கு மணி அளவில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு வீடு ஒன்றில் காலை உணவு சமைத்துக்கொண்டிருந்தபோது குறித்த அடுப்பு வெடித்துள்ளது. யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-125)

*ரயிலில்...*

விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து நேற்றுமாலை காங்கேசன்துறைநோக்கிப் புறப்பட்ட ரயில், வவுனியா ஈரற்பெரிய குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது ஒருவர் ரயில் பாதையில் தலையைவைத்து உயிர்மாய்த்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் வவுனியா தவசிகுளம் பகுதியை சேர்ந்த கந்தையா ரவி (வயது - 55) என்ற குடும்பஸ்தரே உயிர்மாய்த்தார்.

அவரது உடமையிலிருந்து கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டதுடன், குடும்ப விவகாரமே இதற்குக் காரணம் என கூறப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-110,18)

*வெடிக்கத்....*

வாகியுள்ளனஎன்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

எரிவாயு வெடிப்புகளை விரைவில் நிறுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

வெளிநாட்டு பொதிகள் சேவை நிறுவனத்திற்கு பணியாளர்கள் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (O/L சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.)


தொடர்பு: (CS 830) 1-6

**076 283 2397**
lankacargo315@gmail.com

## வீடு வாடகைக்கு தேவை

புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று, கண்டாவளை ஆகிய பிரதேச செயலகங்களிற்குட்பட்ட இடங்களில் அலுவலக பாவனைக் குகந்ததாக நான்கு அறைகளுக்கு குறையாமலும் பிரதான வீதியிலிருந்து 200m இற்கு உட்பட்டதுமாக வீடு வாடகைக்குத் தேவை. (CR 36193) (3.6)

**தொடர்பு: 077 220 1807**



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு கொடிகாமம் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தால் கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமம் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது இதன்போது 250 அங்கத்தவர்களுக்கும் 30 பணியாளர்களுக்கும் 20 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(ய-159)

## வெளிநாட்டில் உடனடி வேலைவாய்ப்புகள்

**கட்டார் சுப்பர் மார்க்கெட்**

பேக்கரி உதவியாளர் இறைச்சி வெட்டுனர், மீன் வெட்டுனர், சமையல் உதவியாளர் உணவு பொதியிடல் உதவியாளர், சமையல்காரர், விற்பனை உதவியாளர், ஆண் பெண், அடிப்படைச் சம்பளம் 72000 இலங்கை ரூபாய்கள். **Overtime** உண்டு ஆங்கில அறிவு அனுபவம், விரும்பத்தக்கது நேர்முகத் தேர்வாளர்கள் இங்கை வரவுள்ளனர்.
தமிழில் உரையாட முடியும் . தங்குமிடம் மருத்துவம் இலவசம்.

**குவைத் வேலைவாய்ப்பு**

பாதுகாப்பு காவலர்கள் **(Securit guards)** சம்பளம் **100000/=** இலங்கை ரூபாய்கள்.
வயது 25/45 உயரமான ஆண்கள் தேவை
( ஒரு குவைத்தினார் 668.25 ) ஆங்கில அறிவு அவசியம்.

**நேர்முகத் தேர்வுகள் 15.12.2021**

தொடர்புகளுக்கு அழையுங்கள் **0777228231** (CS 00934) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பெரியவிளான் கிறேசர் வீதியில் 6 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு:**

1 3/4 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் விளான் சந்தியில் இருந்து 500M தூரம்.
பார்வையிடும் நேரம்: காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை. (தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 61 47 333, 070 7051655** (CS 41556 B) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை பகுதியில் கணக்கர் வளவு 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து **800 m** தூரம்.
பார்வையிடும் நேரம்: காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 81 47 389, 070 705 1655** (CS 41556) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் 10 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை - 12 லட்சம்
(லங்கா பாம் அருகாமை)

**077 6585 999**
**077 6234 204**

(CS 832 A) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ் சுன்னாகம் நகரத்தின் மத்தியில் K.K.S வீதியில் இருந்து 200M தூரத்தில் (இலங்கை வங்கி முன் வீதியில்)
12 பரப்புக் காணி விற்பனைக்கு.
1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும்.

தொடர்பு: **076 8909 259, 077 0150 353** (CS 832 B) 1-6


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மயிலிட்டி B.C.றோட், சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

Call: **077 911 6983**
**077 2880 152**

(CS 832 C) 1-6

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**தோற்றம்**
25 . 09 . 1950

**மறைவு**
09 . 11 . 2021

### லயன் திரு. சின்னத்தம்பி செல்வநாயகம்

*கண்டிப்பும் நேர்மையும்*
*கைகட்டும் உங்களிடம்*
*அண்டியெவர் வந்தாலும்*
*ஆதரவு வழங்கிடுவீர்*
*ஐயம் போக்குபவரே நாம்*
*அழுவது கேட்கவில்லையா*
*ஒரு முறை மீள*
*உயிர் பெற்று வர மாட்டீரா*

எமது தந்தையார் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு, நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும், முகநூல் ஊடாகவும், கண்ணீர் பதாகைகள் மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்து எம் ஆறாத்துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் எமது தந்தை நோயுற்று இருந்த போது வைத்தியம் செய்த வைத்தியர்கள் பராமரித்த தாதியர்கள் அனைவருக்கும் நன்றி. இறுதி நல்லடக்க வழிபாட்டில் பங்கு பற்றிய அனைவருக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS 41550) (3/6) **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### சின்னதுரை சிறிகாந்தராஜா

**(செட்டியார்)**
(ஓய்வுபெற்ற உப- தபால் அதிபர்)

இணுவில் மேற்கு, வட்டுவினியை பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு அங்களப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னதுரை சிறிகாந்தராஜா (செட்டியார்) கடந்த (03.12.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னதுரை - கண்மணிநாயகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவயோகம் (தேவி) அவர்களின் அன்புக் கணவரும், அகிலன் (கண்ணன் - பிரான்ஸ்), பிரியதர்சினி (குஞ்சு - கனடா), அனுஷா (பேபி - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், குபேரானந்தஉதயன் (உத்தமன் - கனடா), நிறஞ்சலா (நிலா - பிரான்ஸ்), ஜனார்த்தனன் (ஜனா - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயலட்சுமிதேவி (தேவி), சிறிகரராஜா (சிறி) சிறிகாந்தகுமாரி (பிள்ளை), பரமேஸ்வரன் (நல்லதம்பி - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யுதிஸ்ரானந்த், அதிஸ்ரா, பருதி, ஆர்த்தி, பிரவீண், யுகேஸ், ஜஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனும் அருளானந்தம் (அருளர்), யோகராணி (செல்லமணி), பரமலிங்கம், விஜயநிர்மலா (விஜயா - கனடா), பூபாலசிங்கம் (ராசு - கனடா), காலஞ்சென்ற சிவானந்தம், குமாரசாமி (துரை), மகாலிங்கம், சிறிபத்மநாதன் (அப்புலிங்கம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தலட்சுமி (பிரதம நூலகர் - யாழ். பல்கலைக்கழகம்), சிறிகாந்தரூபி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஆனந்தலட்சுமி (மானா - ஆசிரியை), ஆனந்தவதனி (UK), குகதாஸ் (கனடா), காலஞ்சென்ற முகுந்தன் மற்றும் சுகந்தன், சுதர்சன் (சுதன்), நிருபன், திவ்யா (கனடா), நிதர்சன், ஜசிந்தன், நிலக்சன் ஆகியோரின் பெரிய மாமாவும், ஜெயவதனா, ஜெயவதனன் (கனடா), சிறி, வஸ்டன் (கனடா), வாகீசன், நிதர்ஜா (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2021) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.30 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
Mobile / Whatsapp
கண்ணன் (பிரான்ஸ்) - 0033 610 040 909
பிரியதர்சினி (கனடா) - 001 416 897 5816
அனுஷா (அவுஸ்திரேலியா) - 0061 434 127 5 82
(இலங்கை) - 0094 77 183 8260

(CS 41552) (3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.